1396

குன்றின் குரல்

- எண்பதுகளில் மலையக இலக்கியம்
- போற்றுதலுக்குரிய பெண்மணி
- ஏன்? எதற்கு? எப்படி?
- பெண்ணடிமை தீருமட்டும்
- மலையக பெண்களும் தலைமைத்துவமும்
- எழுத்துத்துறையும் பெண்களும்
- கோ. நடேசய்யர் நூற்றாண்டு
- மலையக மாதர் இயக்க முன்னேர்டி

— அவர்

விம்மி விம்மி, விம்மி விம்மியழுங்குரல்
கேட்டிருப்பாய் காற்றே! - துன்பக்
கேணியிலே எங்கள் பெண்களழுத சொல்
மீட்டும் உரையாயோ?

— மகாகவி பாரதியார்

விலை
10
ரூபாய்

ஆண்டு 11
இதழ் 1
மார்ச் 92

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றின் குரல்

ஆண்டு 11

இதழ் 1

மார்ச் '92

ஆசிரியர்-

அந்தனி ஜீவா

ஆசிரியர் குழு-

வண. மரிய அந்தனி
திருமதி வசந்தி சிவசாமி
செல்வி மேனகா பீ. ஏ.
இரா. அ. இராமன்

இணை ஆசிரியர்-

ஜே. ஜேஸ்கொடி

பொறுப்பாசிரியர்-

பெ. முத்துலிங்கம்

வெளியீடு

தோட்டப் பிரதேசங்கட்கான
கூட்டுச் செயலகம்

முகவரி-

குன்றின் குரல்
30, புஸ்பதான மாவத்த,
கண்டி.

மலையகத்தின் முதல் பெண்மணி!

இந்த ஆண்டு

உலக மாதர் ஆண்டாகும்..

இந்த உலக மாதர் ஆண்டில்.. நாம் மலையகத்தின் முதல் பெண்மணியான திருமதி மீனாட்சி அம்மையாரை நினைவு கூற வேண்டியது நமது கடமையாகும்.

மலையக் மக்களின் விழிப்புணர்ச்சிக்காக கோ. நடேசய்யருடன் தோட்டம் தோட்டமாகச் சென்று பாடியும் பேசியும் அவர்களை விழித்தெழச்செய்தவர் திருமதி மீனாட்சி அம்மையார்.

''சட்டமிருக்கு ஏட்டிலே – நம்மள்
சக்தியிருக்குது கூட்டிலே
பட்டமிருக்குது வஞ்சத்திலே
பவர் உருக்குது நெஞ்சத்திலே
வேலையிருக்குது நாட்டிலே - உங்க
விணையிருக்குது வீட்டிலே.....''

என்று அம்மையார் பாடிய ''தொழிலாளர் சட்டக்கும்மி'' யில் பல உண்மைகளை எடுத்துச் சொன்னார்.

அம்மையார் கோ. நடேசய்யரின் துணைவியார் மாத்திரமல்ல, அய்யரின் அனைத்து பணிகளிலும் பங்கேற்றார். அய்யர் நடத்திய ''தேசபக்தன்'' தினசரியை அய்யர் வெளியூர் சென்றுவிடும்போது சிறப்பாக நடத்தியுள்ளார். ஆசிரியர் தலையங்கம்கூட எழுதியுள்ளார். அத்துடன் பெண்களின் விழிப்புணர்ச்சிகாக பல கட்டுரைகள் எழுதினார்.

1940-ம் ஆண்டு ''இந்தியர்களது'' இலங்கை வாழ்க்கையின் நிலைமை'' என்ற திருமதி மீனாட்சி அம்மையார் எழுதிய பாடல்களை கொண்ட பிரசுரம் அட்டனில் அச்சிடப்பட்டு ஆயிரக்கணக்கில் தோட்டத் தொழிலாளர்களிடையே பரப்பப்பட்டுள்ளது. அம்மையாரே நேரில் சென்று தோட்ட மக்களிடையே அந்தபாடல்களைப் பாடி பாட்டு புத்தகத்தை விற்பனை செய்துள்ளார்.

இன்றைய மலையக மக்கள் திருமதி மீனாட்சி அம்மையாரைப்பற்றி, அவர் ஆற்றியபணிகள்பற்றி அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். அதுமாத்திரமல்ல ஒவ்வொரு ஆண்டும் அவரை மறக்காமல் நினைவு கூற வேண்டும்.

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஒரு நிமிடம்

ஒரே பார்வையில்

பெ. முத்துலிங்கம்

சிறிது கால இடைவெளிக்குப் பின் குன்றின்குரல் மீண்டும் உங்கள் கரங்களைக் கிட்டும் வேளையில் மலையகம் ஓர் புதிய அனுபவத்தை சந்திக்கத் தயாராகிக்கொண்டிருக்கின்றது. அரசுடமைத் தோட்டங்களின் முகாமைத்துவம் தனியார் கம்பனிகளிடம் சென்றடைந்தவாறு இருக்கின்றது. நாட்டின் தனித்துவ இனங்களில் ஒன்றான மலையகத் தமிழர்களில் தொண்ணூறு சத விகிதமானோர், நாட்டின் பாரிய உற்பத்தி தொழிலில் பாடுபட்டு வருகின்றமையில் காலத்திற்கு காலம் புதிய அனுபவங்களை சந்திக்க நேரிடும் என்பது தவிர்க்க முடியாததொன்றாகி விட்டமையை காண முடிகின்றது. புதிய அனுபவங்களை சந்திக்கவுள்ள இச்சந்தர்ப்பத்தில் நிகழவுள்ள அனுபவங்களை உள்ளடக்கிய எதிர்வு கூறல்களையே குன்றின்குரல் கொண்டிருக்க வேண்டுமென வாசகர்கள் எதிர்பார்த்திருக்கலாம்.

ஆயினும் அதற்கு மாறாக மலையகப் பெண்களின் பிரச்சினைகளை தாங்கி வருகின்றது குன்றின்குரல் தோட்டத் தொழிற்துறையைப் பொருத்த மட்டில் பெண்களே பெரும்பான்மைத் தொழிலாளர்களாக ஈடுபட்டு வருகின்றனர். எனவே தோட்டத்துறையில் ஏற்படும் மாற்றங்களின் தாக்கம் பெரிதும் பெண்களையே பாதிக்கும் இந்நிலையில் பாதியளவில் பாதிப்பிற்குட்படவுள்ள ஜீவன்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளித்தல் பிழையன்று. இதனடிப்படையில் இவ்விதழ் குறிப்பாக மலையகப் பெண்களினதும், பொதுவாக அனைத்து பெண்களினதும் பிரச்சினைகளையும் உள்ளடக்கியதாகவுள்ளது. இவ்விதழைத் தொடரும் அடுத்த இதழ் முகாமைத்துவ தனியார்மயமாக்கலைப்பற்றிய எதிர்வு கூறல்களை உள்ளடக்கியதாக வெளிவரும்.

இனி, இவ்விதழின் உள்ளடக்கங்களை அணுகுவோமாயின், ஆய்வுக்கட்டுரைகளையும், அனுபவக்கட்டுரைகளையும் மற்றும் படைப்பிலக்கியங்களையும் காணமுடிகின்றது. இம்மூன்று பிரிவும், முறையே மலையகத்தின் மூன்று பிரிவினரான அறிவு ஜீவிகள், இடைத்தர அறிவு ஜீவிகள், கீழ்மட்ட அறிவு ஜீவிகள் என்போரின் ஜீரணத்திற்கு உகந்ததாக இருக்கும் என எண்ணுகின்றோம். இம்மூவகை படைப்புகளும் அவ்வவ் வட்டத்தினரின் சிந்தனையை தோற்றுவிக்கும் உந்து சக்தியாக அமையும் என்பதில் ஐயமில்லை

,'எண்பதுகளில் மலையக இலக்கியம்' எனும் சாரல்நாடனின் ஆய்வுகட்டுரை மலையக இலக்கியப் படைப்புகளின் வளர்ச்சியையும், தேக்கத்தையும்பற்றி ஆய்கின்றது. இவ்வாய்வுக் கட்டுரையுடன் திருமதி சோமகாந்தனின் 'எழுத்துத்துறையில்பெண்கள்' எனும் ஆய்வுக் கட்டுரையையும், இணைத்துப் பார்க்கையில் பரந்த ரீதியில் எழுத்துத் துறையில், பெண்களின் பங்களிப்பு எந்தளவு செல்வாக்குப் பெற்றுள்ளது, மற்றும் காலத்திற்குக் காலம் அது எந்தளவு ஏற்றத்தையும், பின்னடைவையும் கொண்டுள்ளது என்பதனை காணமுடிகின்றதுடன், இவ்விரு கட்டுரைகளையும் ஏக காலத்தில் நோக்கும்போது மலையகப் பெண்களின் பங்களிப்பு எந்தளவாகவுள்ளது என்பதை மிக இலகுவில் அடையாளம் காண முடிகின்றது.

இவற்றுடன் தற்போது தோட்டப் பிரதேசங்கட்கான கூட்டுச் செயலகத்தின் உதவி செயலகராகக் கடமையாற்றும் செல்வி மேனகா இப்பதவியை ஏற்க முன் எமக்கு அனுப்பிய ''மலையகப் பெண்களும் தலைமைத்துவமும்'' எனும் ஆய்வுக்கட்டுரை கூடவே அனுபவமும் கலந்ததொன்றாக தொனிக்கின்றது. சாரல் நாடன், திருமதி சோமக்காந்தன் என்போரின் கட்டுரையை யோசிக்கும்போது மலையக பெண்கள் மத்தியில் படைப்பிலக்கியவாதிகள் குறைவாக காணப்பட்டமைக்கான காரணம் மலையக தொழிற்சங்க அமைப்புகள் மத்தியில் காணப்படும் ஆணாதிக்கம் ஓர் பிரதான காரணிகள் ஒன்றா? எனும் சந்தேகத்தை தோற்றுவிக்கின்றது. இதற்கு முத்தாரம் வைப்பது போல் 1959-ம் ஆண்டு காலஞ்சென்ற சி. வி. வேலுப்பிள்ளை அவர்கள் தினக்ரனில் 'திருமதி. சிவபாக்கியம் குமாரவேல்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை அமைகின்றது. மலையகத்தின் வரலாறு என்பது தொழிற்சங்கத்துடன் பின்னிப் பிணைத்த வரலாறாகும். இவ்வகையில் மலையகப் பெண்களின் விழிப்புணர்ச்சியென்பது அண்மைக்காலம் வரை தொழிற்சங்கத்துடனே இணைத்திருந்தது என்பது வெளிப்படையாகும் ஆயினும் சி. வி. வேலுப்பிள்ளையின் கட்டுரையை நோக்குபோதும் தொழிற்சங்கம் எந்தளவு அக்கறை செலுத்தியது, மலையகப் பெண்களின் வளர்ச்சியில் முட்டுக்கட்டையாக் இருந்தது என்பதும் புலனாகும். செல்வி மேனகாவின் கட்டுரை இன்றைய மலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யக வரலாற்றில் புதிதாக கலந்துக்கொண்டுள்ள சமூக நிறுவனங்களில் பெண்களின் பங்கு எவ்வாறாக இருக்கின்றது என்பதையும் இணைத்துள்ளது, இவ்விரு கட்டுரைகளும் இரண்டு தலைமுறையின் அனுபவங்களை உள்ளடக்கியதாக விருக்கின்றன. இக்கட்டுரைகள் இரண்டும் மலையக ஆண்கள், மற்றும் பெண்கள் தம்மைத்தாமே கேள்வியெழுப்ப வழிசமைக்கும் என எதிர்பார்க்க முடிகின்றது.

இவற்றுடன், மாத்தளை வடிவேலனின் பெண்ணடிமைத் தீருமட்டும், சிறுகதையும் புசல்லாவ இஸ்மாலி ஹாவின் ''அஞ்சலை செல்கிறாள்'' என்ற கவிதையும் மலையக மக்களின், சொல்லொணா பொருளாதார நெருக்கடியையும் அவற்றினைத் தீர்த்துக்கொள்ள தத்தமது எல்லைக்கோட்டினுக்குள்ளிருந் தவாறே முயல்வதை சித்தரித்துக்காட்டுகின்றன.

(மலையகத்தின் தொழிற்சங்க முன்னோடியை உலகறியச் செய்த மற்றும் மலையகப் பெண்களின் உண்மை நிலையை அண்மைக்காலங்களாக உலகறியச் செய்து வரும் பேராசிரியை குமாரி ஜயவர்தனவின் மலையக அரசியல் தொடர்பான ஆய்வுக்கட்டுரையுடன்,)குறிஞ்சித் தென்னவனின் கவிதை உட்பட ஏனைய படைப்பாளர்களினது படைப்புகளைத்தாங்கி வரும் இவ்விதழ் பெண்களின் பிரச்சினைகளையே உள்ளடக்கியுள்ளது.

குறிப்பிட்ட இவ்விதழில் வெளிவரும் அனைத்து கட்டுரைகளும் கட்டுரையாளர்களின் தனிப்பட்ட கருத்துக்களாகும். எனவே, இக்கட்டுரைகள் தொடர்பாக விமர்சனங்கள் எழுத அனைவருக்கும் உரிமையுண்டு. குன்றின் குரல் விமர்சனங்களை தயக்கமின்றி வெளியிடும் என்பதை உறுதி கூறுகின்றது.

மலையக அறிவு ஜீவிகள் மத்தியில் தமது பிரச்சினைகள் தொடர்பாக ஆக்கப்பூர்வமான கலந்துரையாடல்களை ஏற்படுத்தி அதன் மூலம் மலையக சமூகம் மற்றும் அறிவுத்துறையில் ஏனைய சமூகங்களுடன் சமநடைபோடுவதற்கான களமாக குன்றின் குரல் அமையும் என்பதை தமது பிரதான குறிக்கோளாக கொள்கின்றது.

எங்கே உங்கள் ஆக்கப்பூர்வமான விமர்சனங்கள் குன்றின் குரலை நோக்கட்டும்

செய்திகள்

நாடக பயிற்சி

மலையகம் நாடகத் துறையில் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளது. மலையக மக்களின் விழிப்புணர்ச்சிக்கு நாடகம் ஒரு கருவியாக பயன்படுத்தப்பட்டது. ஆனால் தற்போது நாடகத்துறையில் ஆர்வம் குன்றி வருகிறது. இதனை ஊக்குவிப்பதற்காக சத்தியோதய நிறுவனம் நான்கு நாட்கள் நாடக பயிற்சி பட்டறையை நடத்தவுள்ளது. இந்த பயிற்சி பட்டறையில் பங்குபற்ற விரும்பும் மலையக இளைஞர், யுவதிகள் திரு. மில்டன் பெரேரா 'சத்தியோதயம்' 30, புஸ்பதான மாவத்தை, கண்டி என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

கல்வியில் வறுமை

தோட்டப் பிரதேசங்கட்கான கூட்டுச்செயலகம் ''மலையக கல்வியின் வறுமை'' என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்றினை நடத்த உள்ளது. மலையக கல்வித் துறையின் முன்னோடிகள் பலர் கருத்துரை வழங்கஉள்ளனர் இந்தகருத்தரங்கில் பங்கு பற்றவிரும்பும் மலையக் கல்வியில் ஆர்வமுள்ளவர்கள் செயலாளர் தோட்டப் பிரதேசங்கட்கான கூட்டுச் செயலகம் 30 புஸ்பதான மாவத்தை, கண்டி என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

'பெண்களும் பொதுசனத் தொடர்பும்'

கண்டி சத்தியோதய நிறுவனம் மாதர் நூற்றாண்டை முன்னிட்டு ஏப்ரல் 20, 21, 22-ம் திகதிகளில் மூன்று நாட்கள் 'பெண்களும் பொதுசனத் தொடர்பு சாதனங்களும்' என்ற கருத்தரங்கு ஒன்றினை நடத்தவுள்ளது. இந்த கருத்தரங்கில் திருமதி பத்மா சோமகாந்தன் (புதுமைப்பிரியை), திருமதி யோகா பாலச்சந்திரன் திருமதி கமலினி செல்வராசன், திருமதி சாந்தி சச்சிதானந்தம், திருமதி அன்னலட்சுமி ராஜதுரை (வீரகேசரி) திருமதி நயீமா சித்தீக் ஆகியோர் கலந்து கருத்துரை வழங்குவார்கள். பங்குபற்ற விரும்பும் மலையக பெண்மணிகள் திருமதி வசந்தி சிவசாமி ''சத்தியோதயம்'' 30, புஸ்பதான மாவத்தை, கண்டி, என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று இறந்தவன் நம்மில் ஒருவன்....!

—பராக்ரம கொடிதுவக்கு—

நிறுத்து
நிறுத்து
அந்தச் சண்டையை நிறுத்து

ஏலாரா மன்னா
அந்த யானையை விட்டுக் கீழே இறங்கு
மன்னன் துட்டகமுனுவே
ஏலாரனுக்கு ஒரு நாற்காலியைக் கொடு

●

இதோ இங்கே அவள்
ரப்பர் பால் வெட்டும் கூட்டத்துடன்
ரப்பர் மரங்களைச் சுற்றுச் சுற்றிச் செல்கிறாள்
அம்மா பால் கறக்கப் போயிருக்கிறாள்
சரசுவதி
அவளது முறுவலிக்கும் உதடுகள்
ஏலாரனின் புன்னகைக்கு ஒளியூட்டும்

தேயிலைப் புதர்களுக்குக் கீழே
கைகளில் லிலியெடுக்க
காற்று விசிறியடிக்கும் மழையில் நனைந்தவாறு
வியர்வை முத்துக்களின் கீழ்
அவளது வெண்கலக் கண்கள் மிளிர
மௌனமாய்க் காத்துக் கொண்டிருக்கிறாள்
அவளது நாசித் துவாரத்தில்
மின்னும் மூக்குத்தி
நித்யகலா
ஏலாரனின் சகோதரி
சரசுவதி நித்யகலா

●

நாம் மெனிக்கங்கை நதியினிலே
ஒன்றாய்க் குளித்தோம்
சிறீபாதத்திலோ நாம்
ஒன்றாய் வழிபட்டோம்
நாம்பள்ளிக்கூடத்திலோ
ஒன்றாக இருந்தோம்
தோசைக் கடையில் நாம்
ஒன்றாக வடை சாப்பிட்டோம்
கதிர்காமத்தில்
எங்கள் அலுவலகத்தைச் சேர்ந்த சோமதேவிக்கு
சிவலிங்கம் தன் முகவரியைக் கொடுத்தான்

ஏலாரன் துட்டகமுனு சண்டை!
துட்டகமுனுவுக்கு வெற்றிக்குமேல் வெற்றி

ஒரு யானையின்முதுகின் மேல் ஏலாரனின் பிணம்
அந்தக் கைதட்டலை நிறுத்து
அந்தக் கைதட்டலை நிறுத்து
அந்தக் கைதட்டலை நிறுத்து
கைதட்டுதல் நாசமாய்ப் போக!
அந்தப் பெயருக்கு
ஒரே..ஒரு..கண்ணீர்த்துளியை
வழங்கப்போவது யார்?

அன்று இறந்தவன்
நம்மில் ஒருவன்...!
நமது ரத்தபந்தங்களில்
ஒருவன்!

பழங்காலத்தில் இலங்கையிலிருந்த ஏலாரன் என்றதமிழ் மன்னனுக்கும் துட்டக்முனு என்ற சிங்கள மன்னனுக்கும் நடந்த போரில் ஏலாரன் கொல்லப் பட்டான். இந்தப் போர் இருமன்னர்களுக்கிடையே நடந்த போரேயன்றி இன அடிப்படையில் நடந்ததல்ல ஏலாரன் பௌத்த சமயத்தை மதித்தது போலவேதுட்டக்முனு சைவநெறியைமதித்தவன் சிங்கள இனவெறியைப் பரப்பியவர்களே பிற்காலத்தில் அப்போரை இனங்களுக்கிடையே நடந்த போராகத் திரித்துக் கூறலாயினர்

பராக்ரம கொடிதுவக்கு சமகாலச் சிங்களக் கவிஞர்களில் மிகச்சிறந்தவராக க்ருதப்படுகிறவர். சிங்களப் பண்பாட்டு மரபிலுள்ள பிற்போக்குத்தனமான கூறுகளை விமர்சிப்பவர்

நன்றி:மல்லிகை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எண்பதுகளில் மலையகம் இலக்கியம்

சாரல் நாடன்

எண்பதுகளில் மலையக இலக்கியம் பற்றி பேசத் தலைப்படுகையில் நமது நினைவுகள் இயல்பாகவே, ''அறுபதுகளில் மலையக இலக்கியம்'' என்றும் அசைப்போட ஆசைப்படுகின்றன.

மலையக இலக்கியம் மண்வாசனையுடன், சமகால எதிர்பார்ப்புக்களுக்கும், அளவுகோல்களுக்கும் ஏற்ற முறையில், வளர்ந்துவரும் அறிகுறிகளுடன், இலக்கிய விற்பன்னர்களின் பரந்துபட்ட கவனத்தை ஈர்க்க ஆரம்பித்தது அறுபதுகளில்தான். அத்தகு கவன ஈர்ப்பு, மலையக இலக்கியத்தின்பால் மீண்டும் எண்பதுகளில் ஏற்பட்டு இருக்கின்றது. இம்முறை ஏற்பட்ட இந்த ஈர்ப்பு, அங்கீகாரம் பெறும் அளவுக்கு உள்ளடக்கம் மிகுந்ததாகவே உள்ளது. எனவே, இந்த அங்கீகாரம், இம்முறை இலங்கையிலும், தமிழகத்திலும் என்று மாத்திரமன்றி ஐரோப்பிய வாழ் தமிழர்கள் மத்தியிலுமிருந்து வரத் தலைப்பட்டுள்ளது.

(80 களின் தொடக்கத்தில் 'ஒரு கூடை கொழுந்து' என்ற சிறுகதைத் தொகுதி வெளிவந்தது. இலங்கை அரசாங்கத்தின் சாகித்தியப் பரிசு அதற்கு கிடைத்தது. 'வைகறை' வெளியீடாக இந்த நூலை வெளிக்கொணர்ந்த மு. நித்தியானந்தன் இதற்கு முன்பதாகவே – எண்பதுகளுக்கு முன்பதாகவே – தெளிவத்தை ஜோசப்பின் படைப்புக்கள் அடங்கிய சிறுகதைத் தொகுதி ஒன்றை வெளியிட்டு 'நாமிருக்கும் நாடே' என்ற அந்த நூலுக்குச் சாகித்தியப் பரிசைப் பெறச் செய்திருந்தார். மு. நித்தியானந்தனின் முயற்சியால் சி. வி. வேலுப்பிள்ளையின் 'வீடற்றவன்' என்ற குறுநாவல் ஒன்றும் வெளியானது.

இந்த மூன்று வெளியீடுகளும், 'வைகறை' என்ற வெளியீட்டு அமைப்பின்மூலம் பிரசுரம் பெற்றது என்பது கவனிக்கத்தக்கது.

மு. நித்தியானந்தன் மலைநாட்டில் பிறந்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பதவிப் பிரமாணம் அளவுக்குக் கல்வித் தகைமைகளால் உயர்வு அடைந்தவர். தமதுப் பதவிக் காலத்தில் – தமது பிறந்த மண்ணான மலையகத்துக்கு அவர் ஆற்றிய விலை மதிப்பற்றப் பணிகளாக இந்நூல் வெளியீடுகள் அமைகின்றன.

(இன்று எம்மிடையே என். எஸ். எம். ராமையா என்ற எழுத்தாளனும், சி. வி. வேலுப்பிள்ளை என்ற கவிஞனும் உயிரோடு இல்லை. மலையகச் சிறுகதைச் சிற்பி என்றும், மக்கள் கவிமணி என்றும் முறையே புகழாரம் பெற்ற மேலிருவரும், மலையக இலக்கியத்துக்கு ஆற்றியப் பெரும் பணிகள் நூலுருவம்பெற்ற அவர்களது படைப்புக்களால் காலங்காலமாக நினைவுக் கூறப்படும். மலையகத்தில் நூல் வெளியீடு இந்நூற்றாண்டின் முதல் தசாப்தத்திலேயே தோன்றிவிட்டது.

(1907ம் ஆண்டு 'கும்மியோ கும்மி கோப்பிக்காட்டு கும்மி' என்ற நூல் மலையகத்தில் கண்டி கட்டுகலையிலிருந்து வெளியிடப்பட்டுள்ளது என்பதற்கான ஆதாரங்கள் பெறப்பட்டுள்ளன) இன்று 84 ஆண்டுகாலமாக மலையகம் நூல் வெளியீட்டுத் துறையில் மிகவும் பின் தங்கியிருப்பதை ஒத்துக்கொண்டாகவேண்டும்.

இன்றுவரையிலும் மலையக இலக்கியத்தின் வளர்ச்சியையும் அதன் பாரிய பங்களிப்பையும் வெளி உலகமும் விமர்சன உலகமும் விளங்கிக்கொள்ள முடியாது போனமைக்கு, நூல் வெளியீட்டுத்துறையில் நிலவிய பின்தங்கலே காரணமாக கொள்ளப்படுதல் வேண்டும்.

எண்பதுகளில் இக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் பணிகள் நம்பிக்கையூட்டும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (சி. வி. வேலுப்பிள்ளையின் 'வீடற்றவன்' குறுநாவல் 1981ல் வெளிவந்ததையடுத்து அவரது 'மலைநாட்டு மக்கள் பாடல்கள்' என்ற தொகுப்பும், 'இனப்படமாட்டேன்' என்ற நாவலும் 'நாடற்றவர் கதை' என்ற கட்டுரை நூலும் தமிழகத்தில் வெளியாகின.)

(மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்' என்ற அமைப்பின் மூலம்வெளியான 'முத்துத்துளிகள்', கல்ஹின்னை கமிழ் மன்ற வெளியீடுகளான 'அங்கமெல்லாம் நெறஞ்ச மச்சான்' 'மலைக் குயில்', வாழ்க்கைச் சுவடுகள்', மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் வெளியீடான 'குழந்தைக் குயில்', மல்லிகைப் பந்தலின் வெளியீடான 'இரவின் ராகங்கள்', மாத்தளை எழுத்தாளர் ஒன்றியத்தின் வெளியீடான 'தோட்டக் காட்டினிலே' மற்றும்கண்டிஎம்.ராமச்சந்திரனின் 'கவிதை, மலரன்பனின் 'கோடிச்சேலை' தி. இரா. கோபாலனின் 'கண்ணான கண்மணிக்குக் கதைகேட்க ஆசையில்லை' என்ற நூல்களும் இக்காலப் பகுதியில் வெளியாகின.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

('இயாக யந்திரங்கள்', 'குறிஞ்சித் தென்னவன் கவிதைகள்', ஓவியம்' கூடைக்குள் தேசம்'; யௌவனம், லாவண்யம் மேகமலைகளின் ராகங்கள், சி. வி. சில சிந்தனைகள்', தேசபக்தன்' கோ. நடேசய்யர் என்ற ஒன்பது நூல்களை இரு வருடகால இடைவெளிக்குள் வெளியிட்டு 'மலையக வெளியீட்டகம்' என்ற அமைப்பு இந்த நூல் வெளியீட்டு முயற்சிகளுக்கு 'புதிய' உந்துசக்தியைக் கொடுத்தது.)

(இந்தக் காலப்பகுதியில் தமிழகத்திலிருந்து மாத்தளை சோமு எழுதிய 'நமக்கென்றொரு பூமி' சிறுகதைத் தொகுதியும் 'அந்த உலகத்தின் இந்த மனிதர்கள்' என்ற நாவலும் வெளியாகியுள்ளன.)

மலையகத்தைப் பொறுத்தமட்டில் இது குறிப்பிட்டுக் கூறப்படவேண்டிய ஒரு வளர்ச்சியாகும். மலையக மக்களைப்பற்றிய இலக்கிய முயற்சிகள் ஏனைய இலங்கை சமூகத்தவர்களைப் பற்றிய இலக்கிய முயற்சிகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவு என்பதை ஒத்துக்கொள்ளும் அதே நேரத்தில் நூல் வெளியீட்டுத் துறையில் எண்பதுகளில் மலையகம் காட்டியிருக்கும் வளர்ச்சி முன்னெப்போதும் இல்லாத ஒன்றாகும் என்பதையும் மறுப்பதற்கில்லை. இது வாழ்வை பன்முகவெளிப்பாட்டில் தரிசிக்கும் இலக்கியத் தேவைக்கு மலையகம் தன்னைத் தயார்படுத்திக்கொண்டதற்கான அடையாளமாகக் கொள்ளப்படுதல்வேண்டும்.

போரிடுவதற்குக் களமும். வாதிடுவதற்கு மன்றமும் தேவை. இலக்கியகர்த்தாக்களுக்கு இந்த இரண்டையும் சிறு சஞ்சிகைகள் கொடுத்துதவுகின்றன. மலையக இலக்கிய கர்த்தாக்கள் தங்களது படைப்புக்களை வெளியிடுவதற்கு சிறுசஞ்சிகைகளையே பெரிதும் நம்பியிருக்கிறார்கள். எண்பதுகளில் தோன்றி நின்றுபோன சஞ்சிகைகள்' மறுமலர்ச்சி', அல்லி', மலைஒசை, உதயம், நவ உதயம், மலைக்சாரல், குறிஞ்சிக் குரல்', குருதிமலர்', நதி இயக்கம், வெண்ணிலா, தீர்த்தக்கரை, சௌமியம், கொழுந்து, கொந்தளிப்பு, என்பவைகளாகும். தாக்கம், தேயிலை, ப்ரியநிலா, குன்றின் குரல் ஆகியன இன்றும் வெளிவருகின்றன. மாவலி, காங்கிரஸ், தேசிய முரசொலி, முரசு என்ற தொழிற்சங்க ஏடுகளில் இருந்திருந்து சில கவிதைகள் இடம்பெறுகின்றன.

இவைகளுள் 'தீர்த்தக்கரை' காலாண்டு இலக்கிய சஞ்சிகையாக வெற்றிகரமாக 1980ல் ஆரம்பித்து ஐந்து இதழ்களுடன் நின்றுபோனது. ''மனித சமுதாயத்தின் சிகரத்தை எட்டிப்பிடிக்கத்தக்க கடின உழைப்பை மேற்கொள்ளும் இலக்கியவாதிகளின் அழகும் வீச்சும் மிக்க படைப்புகள் உருவாக நாம் களம் அமைப்போம்'' என்று குறிப்பிட்டிருந்ததோடு, ''இலக்கிய கங்கையாகப் பிரவாகம் கொள்ளத் தேக்கம் கொண்ட பல முயற்சிகளை வெறும் வாய்க்கால்களாக மாற்றிவிட்ட பெருமை நிதிப்பிரச்சனைக்குண்டு'' என்றும் எச்சரித்திருந்த தீர்த்தக்கரை உயிர்தரித்திருந்தக் காலப்பகுதியில் பாரிய சமுதாய உணர்வுக்கும் இலக்கிய விழிபபுக்கும் உதவியிருந்தது.

'சௌமியம்' இ. தொ. கா. 1987ல் வெளியிட்ட சமூகக் கலை இலக்கிய இதழாகும். இதுவும் நான்கு இதழ்களுடன் மரணித்துப்போனது. ''மலையகத்தை மையமாகக்கொண்ட இதழின்தேவையை'' உணர்ந்து, இப்படியோர் இதழை வெளியிட ஆரம்பித்திருந்த பணப்பலம் படைத்த நிறுவனம் ''சௌமியத்தை வளர்ப்பது வாசகர்களின் படைப்பாளர்களின் ஆதரவிலும் ஈடுபாட்டிலுமே தங்கியுள்ளது'' என்று கூறியிருந்தது.

'கொழுந்து' 1988ல் ஆரம்பிக்கப்பட்டு ஏழு இதழ்கள் வெளிவந்து தடைபட்டுப்போனது. மலையகக் கலை இலக்கியப் பேரவையின் வெளியீடாக, வெளிவந்த இந்த இதழ் பரவலான இலக்கிய அங்கீகாரத்துக்கு வழி வகுத்தது. சிறப்பாக இதில் வந்த ஆக்கங்கள் இலங்கையிலேயே பிற ஏடுகளின் மறு பிரசுரம் பெற்றன; தமிழகத்திலிருந்து வெளியாகும், தணையாழி, மக்கள் மறுவாழ்வு, மக்கள் மன்றம் என்ற ஏடுகளும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த தேனி, சிந்தனை, வெகுஜனம், தரண்டில், தேடல் போன்ற ஏடுகளும் அவைகளை விரும்பி மறு பிரசுரம் செய்தன.

மலையக இலக்கியத்தைப்பற்றிய தேடுதல் முயற்சிகளில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கையை இந்த சஞ்சிகைப் பெருக்கியிருக்கின்றது.

300 அபராதம்

3 மாதம் சிறைவாசம்

குடியேற்ற நாடுகள் பலவற்றிற்கு ஒப்பந்தக் கூலிகளாக கொண்டு செல்லப்பட்ட இந்தியர்கள் அங்கு கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள் அடித்துத் துன்புறுத்தப்பட்டார்கள், சிறைக்குள் தள்ளப்பட்டார்கள். இத்தகைய கொடூரமான சம்பவங்களைப்பற்றி கேள்விப்பட்ட இந்திய அரசாங்கம் 1829ம் ஆண்டு இந்தியர்களை வெளிநாடுகளுக்கு செல்வதைத் தடைசெய்யும் நோக்கோடு ஒரு சட்டம் இயற்றியது. தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லும் விவகாரத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டால் 300 ரூபா அபராதம் அல்லது 3 மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்க நேரும் என்று அறிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ப்ரிய நிலா' தொடர்ந்தும் வெளிவந்துக்கொண்டிருக்கும் சஞ்சிகை. கேகாலை மாவட்டத்தில் இலக்கிய விழிப்புணர்வுக்குப் பெரிதும் உதவிய இந்த ஏடு, பல புதியவர்களுக்குத் தளம் அமைத்துக் கொடுத்துள்ளது.

('குன்றின் குரல்' என்ற சஞ்சிகையில் 'காலத்தை வென்ற சிறுகதைகள்' என்ற தலைப்பில், மறுபிரசுரமான சிறு கதைகள்பற்றி சிறப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். நூருவம் பெறாத காரணத்தால் இன்றைய வாசகர்களுக்குக் கிடைக்காமல் இருந்த மூத்த எழுத்தாளர்களின் தரமான மலையகச் சிறு கதைகளை தேடிப்பிடித்துப் பிரசுரித்ததின்மூலம்) இன்றைய வாசகனின் இலக்கிய அநுபவத்தை விசாலிக்க இவைகள் உதவின. மேலும் மலையகத்தின் மறைந்துபோன போன தலைவர்களைப்பற்றிய வாழ்க்கைக் குறிப்புக்கள் வாசகர்களிடையே சமூக உணர்வினையும், தெளிவையும் ஏற்படுத்தின. இந்த இரு பங்களிப்புக்கும் காரணகர்த்தாவாக இருந்தவர்கள் மலையகக் கலை இலக்கியப் பேரவைச் செயலர் அந்தனி ஜீவா, சத்யோதய நிறுவனத்தை சேர்ந்த ஜேஸ்கொடி என்ற இருவருமாவர்.

இவைகளையெல்லாம் உடன்வைத்துப் பார்க்கையில் 1983 இனக்கலவரத்தால் பாதிப்புற்று தடைப்பட்டுப் போன இலக்கிய முயற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பது தெரிய வருகின்றது.

(இலங்கையின் நாளேடுகளில் ஒன்றான வீரகேசரி ஞாயிறு வெளியீட்டில், மீண்டும் வெளிவரத் தொடங்கியிருக்கும் 'குறிஞ்சிப் பரல்கள்' என்ற பகுதி காத்திரமான பங்களிப்பினைச் செய்துள்ளது.)

(1986ல் இதன்மூலம் மலைநாட்டு எழுத்தாளர் மன்றதின் 6வது சிறுகதைப் போட்டி நடைபெற்றதும், இதில் பரிசுபெற்ற சிறுகதைகள் ''கொழுந்து'' சஞ்சிகையில் வெளிவந்ததும் மனங் கொள்ளத்தக்கது.)

எண்பதுகளில் – குறிப்பாக 1983 இனக் கலவரத்துக்குப் பின்னர், இலங்கைவாழ் தமிழர்களின் பிரச்சனை சர்வதேசக் கவனத்தை ஈர்த்தது. இயல்பாகவே இலங்கைவாழ் இந்தியத் தமிழர்களைப்பற்றி அறிந்துகொள்ளும் தேவை பலருக்கும் ஏற்பட்டது. (1984ல் தமிழகத்தில் மலையக மக்களைப்பற்றி அறியச் செய்வதற்கென்றே காங்கிரஸ் தொழில் நிறுவனம், இ. தொ. கா.வுக்காக 'இலங்கையில் தமிழர் பிரச்சனை' என்ற ஒரு நூலை வெளியிட்டது) ('இலங்கைத் தமிழரை அந்தமானில் குடியேற்றுங்கள்' என்ற ஒரு வெளியீடு, அந்தமானில் 1983ல் வெளியாயிற்று) ('தோட்டத் தொழிலாளர் பற்றிய உண்மைகளும், பொய்மைகளும்' என்ற நூலை 1986ல் யாழ்ப்பாண பல்கலைக்கழக, மறுமலர்ச்சிக் கழகம் வெளியிட்டது.) (இலங்கையிலிருந்து இந்தியாவுக்குக் குடிபெயர்ந்த மக்கள் மத்தியில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 'எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள்' என்ற நூல் தமிழகத்தில் 1984ல் 'சிராக்' நிறுவனத்தின்மூலம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வெளியிடப்பட்டது.)

தமிழகத்திலிருந்து 'மக்கள் மறுவாழ்வு' என்ற தமிழ் மாத வெளியீடு 1982ம் ஆண்டிலிருந்து வெளிவருகின்றது. இந்தியா திரும்பிய இலங்கை மலையக மக்கள் மத்தியில் பெரும் பணி புரிந்துள்ளது. ''இலங்கை மலையகத்தில் நூறுவருடங்களாக வேரூன்றியிருந்த சமூகத்தைச் சார்ந்தவர்கள். இந்தியாவில் மறுவாழ்வுத் திட்டங்களின் கீழ் குடியேற்றப்பட்ட வேலையில் சிதறடிக்கப்பட்டும், சினைமாப்பிள்ளைப்படுத்தப்பட்டபோதும் அவர்களின் ஓலங்களுக்கும், கொடிய அநுபவங்களுக்கும் ஓர் மேலடையமைத்து முழக்கமிட்டது. 'மக்கள் மறுவாழ்வு' மட்டுமே. நமது மக்களுக்கு சரித்திரமே இல்லை; இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட்டவர்களுக்கும் 'மக்கள் மறுவாழ்வு' சரித்திரச் சான்றுகள் தந்துகொண்டிருக்கிறது'' என்று கூறுகின்றார். இர. சிவலிங்கம் (மக்கள் மறுவாழ்வு-5ம் ஆண்டு நிறைவு மலர் பக்கம் 2). இப்படிக் கூறும் இர. சிவலிங்கம் EXODUS என்ற ஆங்கில ஏட்டின் ஆசிரியர்.

தமிழகம் திரும்பிய மக்களின் வேதனைப் பட்டியல்களையும், வெற்றிப்பட்டயங்களையும் வெளியிட்டு அவர்கள் மத்தியில் தொழுமையை வளர்த்து, தொடர்புப் பாலமாக விளங்குகின்ற 'மக்கள் மறுவாழ்வு' போன்ற ஓர் ஏடு நம்மிடையே இலங்கையில் இல்லாதது பெரும் குறையாகும். இதன் 5வது ஆண்டு மலர் 1987ல் வெளிவந்துள்ளது. மலையக மக்களது வாழ்வு, வரலாறு, அரசியல், இலக்கியம், புள்ளிவிவரங்கள் என்று பலதரப்பட்ட முப்பது படைப்புக்களை ஒன்றாகச் சேர்த்து வாசிப்பது ஒரு புது அநுபவமாகும்.

80களில் 'மாத்தளை ரோகிணி, கங்குலன், பன்பாலா, மாத்தளை வடிவேலன் போன்றோர் பத்திரிகைகளில் தொடர் நாவல்கள் எழுதினர். முறையே 'துயரம் வந்தபோது' 'கந்தசாமி ஊருக்குப் போகிறான்' 'என்று நீ அன்று நான' என்ற இந்த பத்திரிகைத் தொடர் நாவல்கள் வாசகர்களின் தேவையை உணர்ந்த பத்திரிகை எழுத்தாளர்கள் மலையகத்தில் உருவாகத் தொடங்கி இருப்பதைப் புல்ப்படுத்துகிறது. பத்திரிகைத் தொடர் நாவல்களுக்கு இந்த விதத்தில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டதும் 80களில் ஒரு முக்கிய அம்சமாகக் கருதப்படலாம். இது இந்தக் காலக் கட்டத்தில் மலையகத்தை முழுமையாக அறிவதற்கு பலமட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதின் காரணமாக சாத்தியப்பட்டிருக்கலாம்.

இதன் காரணத்தால் போலும் எழுத்துலகிலிருந்து அஞ்ஞாதவாசம் மேற்கொண்டிருந்த சாரல்நாடன், தமிழோவியன், மு. சிவலிங்கம் போன்றோர் மீண்டும் எழுத ஆரம்பித்தனர். தெளிவத்தை ஜோசப், குறிஞ்சி தென்னவன், மல்லிகை சி. குமார், அந்தனி ஜீவா, லிங்கதாசன், ஜெயசிங், ஏ. வி. பி. கோமஸ் ஆகியோரது படைப்புக்கள் தொய்வின்றித் தொடர்ந்தன. புதுக்கவிதை படைப்பதில் ஏராளமானோர் ஈடுபட்டுள்ளனர். சு. முரளிதரன் தனித்துப் பிரகாசிக்கிறார். வெலிமடை ரபீக் வேகமாக அங்கீகாரம் பெற்று வருகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980களில் பெயர் கூறப்படும் உயிர்த் தியாகம் மலைநாட்டில் ஏற்படவில்லை. இதற்கான வட்டியும் முதலுமாக எண்ணற்ற -இனம் காணப்படாத இழப்புக்கள் 1983 இனக்கலவரத்தால் ஏற்பட்டது. இதன் தொடர்விளைவாக ஆயிரக்கணக்கில் மக்கள் இடம் பெயர்ந்தனர். தொடர்ச்சியாக வளர்ந்து வந்த அறிவு ஜீவிகளின் தொடர்பு அறுந்துபோனது. இதற்கிடையில் இலங்கையின் வடபுறத்து சிறுபான்மைஇனத்தினரான தமிழர்கள் புதிய கண்ணோட்டத்தில் சிந்திக்கவும் செயற்படவும் ஆரம்பித்தனர். மலையகத்திலும் அதன் பாதிப்புக்கள் பலவிதத்தில் வெளிப்பட ஆரம்பித்தன.

இப்படியொரு பங்களிப்புக்கு மலையகத்தைத் தயார்செய்த காரணிகள் எவையென்று பார்ப்பதும் பயனளிக்கும் பணியாகும்.

எண்பதுகளில், பொதுநியதியாக இலங்கையில் மனித வாழ்க்கை முன்னெப்போதுமில்லாதவிதத்தில் மாறுதல் பெற்றது, நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிகழ்ச்சிகளும், அரசியல் கொந்தளிப்புகளும் இனப் போராட்டங்களும் இனவன்முறைகளும் இந்த மாறுதலுக்கானப் பிரதான காரணமாக அமைந்தன தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கை புதிய பரிணாமம் பெற்றது மக்கள் தம்மில் ஒருவரை மற்றொருவர் அச்சத்தோடும் அசூயையோடும் நோக்க ஆரம்பிக்கும் போக்கும் தோன்றியது. அமைதியற்ற வாழ்க்கை ஆரம்பிக்கத் தொடங்கியது. வாழ்வில் சலிப்பும் விரக்தியும் தோன்றவாரம்பித்தன.

நிகழ்காலம் நிச்சயமற்றதாக இருக்கையில் எதிர்கால நம்பிக்கை ஏற்படுவதற்கு கடந்தகாலப்பெருமைகள் உதவலாம் வரலாற்றில் இதற்கான ஆதாரங்கள் உள்ளன. போர்களுக்கு மத்தியில் புதிய எல்லைகள் தோன்றியிருக்கின்றன. போராட்டங்களுக்கு மத்தியில் புதிய சித்தாந்தங்கள் பெற்றியடைந்திருக்கின்றன: புதிய பரிணாமத்தில் துடிப்பு மிக்க இளைஞர்கள், தமது வாழ்வுக்கு ஆரம்பம் இல்லை, என்றுணர்ந்தார்கள். இளமைப் பருவத்தை தாண்டியவர்கள் தமது வாழ்வில் அர்த்தம் இல்லை என்றுணர்ந்தார்கள் இந்த நிலையில் இலக்கிய முயற்சிகள் பின்னடைந்துபோயின இந்தப் பின்னடைவிலிருந்து மீண்டும் இயங்க ஆரம்பித்திருக்கும் மலையக இலக்கியத்துக்கு மலையகக்கவை இலக்கியப் பேரவையின் தோற்றமும், தொடர்ச்சியான செயற்பாடுகளும் ஒரு காரணமாகும். பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற நூலகக் கருத்தரங்கும் 1987ல் இடம் பெற்ற எழுத்தாளர் பயிற்சி அரங்கும் குறிப்பிடத்தக்கவை.)

மலையகத்தின் பலபாகங்களில் செயல்படும் சமூக நிறுவனங்களையும், மன்ற அமைப்புக்களையும் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை இன்றைய அரசாங்கத்தில் மலையகப் பங்கேற்பின் முக்கியத்துவத்தால் இவைகளுள் பல உயிர்ப்புடன் விளங்குகின்றன, என்றபோதும் இலக்கியம், எழுத்து, நூல்கள் என்று தரப்படுத்திக் கணிப்பு மேற்கொள்ளும் போது அவைகளின் முக்கியத்துவம் குறையத் தொடங்குகின்றன,

பத்திரிகை நிருபர்களும் சமூக நிறுவன இயக்க அறிக்கையாளர்களும் தம்மை எழுத்தாளர்களாகவும், இலக்கியக் கர்த்தாக்களாகவும் பம்மாத்துப்பண்ணிய போலித்தோற்றம் இன்று மலையகத்தில் உருக்குலைந்து போயிருக்கின்றது

படைப்புக்கள் படைப்புக்கள்தாம் படைப்புக்கள் மூலம் தம்மை இனம் காட்டிக் கொண்டவர்கள் மலையக இலக்கியக் கர்த்தாக்கள். இவர்களைஏகலைவர்கள் என்று கூறுவதும். பாதைவெட்டிப் பயணம் செய்பவர்கள் என்று சிறப்பிப்பதும் இந்த கட்சி சேர்க்காத திறமையினால்தான். இவர்களின் பார்வை தெளிவானது . கலையுலகம் சார்ந்தது. தமது புறவாழ்வின் களத்தைத் தம் இலக்கியத்தின் பகைப்புலமாக்கிக் கொண்ட காரணத்தால், இவர்தம் படைப்புக்கள் எளிதில் அங்கீகாரம் பெற்றன.

ஓர் இனத்தின் கலை இலக்கியங்களும் கலாச்சாரமும் பேணிப்பாதுகாக்கப்படுவதன் மூலமே அந்த இனம் தனித்துவம் கொண்டதாகத் தலைநிமிர்ந்து நிற்க முடியும்' (நந்தி எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம் 10வது வெளியீடு) என்பதையுணர்ந்த எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம் மிக நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் இக்காலக்கட்டத்தில் நூல் வெளியீடுகளில் ஈடுபட்டது என்பதை எண்ணிப் பார்க்கையில் 1983 இனக்கலவரத்துக்கும் – இடப்பெயர்ச்சிக்கும் உள்ளான மலையகத்தினரின் இலக்கிய பங்களிப்பு குறைத்து மதிப்பிடுவதற்குரியதாகாது என்பது பெறப்படும். 1983ல் நிர்ப்பந்தமான இடப்பெயர்ச்சிக்குள்ளானவர்களில் பெயர் குறிப்பிடக்கூடியவர்களாக இருப்பவர்களில் கே கணேஷ்குமார் எஸ். இஸாட் ஜெயசிங். வீரா. பாலச்சந்திரன் எஸ், திருச்செந்தூரன், இரா. சிவலிங்கம் என்பவர்கள் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் என்ற சிறப்புக்குரியவர்கள்,

ஒரு சமூகம் ஒரு நாட்டிலிருந்து இடம்பெயர்ந்து இன்னுமொரு நாட்டில் குடியேறும் போது, அது தன் சமூகத்தன்மையை இழக்கிறது (de-social isation) இச்சமூகத்தன்மையை மீண்டும் பெற செய்யப்படும் முயற்சிகளே ஒரு புதிய வரலாறாக உருவெடுக்கின்றது மேற்குறிப்பிட்ட அனைவரும் இந்தப் புதிய வரலாற்றை உருவாக்கும் முயற்சிகளில் தம்மை இந்தியமண்ணில் பிணைத்துக் கொண்டிருக்கின்றனர் இவர்களில் கே, கணேஷ்குமார் கர்நாடகத்தில் குடியேறி அங்குள்ள ரப்பர் தோட்டத்தில் பணியாற்றுகின்றார் எனபதுவும் இவரது சிறுகதைகள் தமிழகத்து ஏடுகளில் மாத்திரமன்றி கன்னட ஏடுகளிலும் வெளிவருகின்றன என்பதும் மகிழ்ச்சிக்குரியத் தகவல்களாகும். இவையெல்லாம் இயல்பாக ஏற்பட்ட வளர்ச்சிகளாகும். (இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றை விரிவாகவும் முழுமையாகவும் ஆராயப்புகும் எவரும் தவிர்க்கமுடியாதவாறு மலையக இலக்கியத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டிய அளவுக்கு மலையக இலக்கிய உலகில் வளர்ச்சி இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது' என்கிறார் கலாநிதி க அருணாசலம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(எண்பதுகளில் இந்த வளர்ச்சியின் ஒருகட்டமாக குறிப்பிட்டுக் கூறத்தக்க விதத்தில் மொழிபெயர்ப்புக்கள் இடம் பெற்றன.

(தமிழில் வெளிவந்த கட்டுரை, கவிதை, சிறுகதை என்ற மலையக இலக்கியப் படைப்புக்கள் சிங்கள மொழியில் பெயர்க்கப்பட்டு அச்சில் வெளியாயின.

ஜேஸ் கொடி, இப்னூ அசோமட் என்ற இருவரும் இத்தகு மொழிபெயர்ப்பில் முன்னின்று உழைத்தனர். இலங்கைத் தீவில் ஒரு வழிப்பாதையாகவே இடம் பெற்று வருகின்ற – சிங்களத்திலிருந்து தமிழுக்கு என்பதை மாற்றியமைத்து, தமிழிலிருந்து சிங்களத்துக்கு தோற்றுவிக்கப்பட்டுள்ள இந்த முயற்சி பலவிதத்திலும் ஆதரிக்கப்படுதல் அவசியமாகும்.)

தன்னை இலங்கையில் தனித்துவமிகுந்த தேசிய இனமாகக் கருதுதல் வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தும் மலையக சமூகத்தைச் சார்ந்த ஒவ்வொருவனும் இந்த முயற்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்திடல் மிகவும் அவசியமான ஒன்றாகும்.

1983 இனக்கலவரம் இந்த மக்களை - குறிப்பாக மத்தியதர வகுப்பினரை, வளர்ந்துவந்து கொண்டிருந்த அறிவுக்கும்பலை அலைக்கழித்து இடம் பெயரச் செய்தது, என்பதைப்போலவே, "இதற்கு பின்னர் இழப்பதற்கு வேறு ஒன்றுமில்லை" என்ற நிலையில் எதிர்ப்பதற்கு தம்மைத்தயார்பண்ணி கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு மலையகத் தமிழர் உட்பட்டார்கள்

"தாக்குவதே தற்பாதுகாப்புக்கான வழி" என்ற முறையில் வளரத் தலைபட்ட இந்த மனோபாவம் இலங்கையைத் தாயகமாக வரிக்கவும், மலையகத்தைத் தமக்குச் சொந்தமான மண்ணாக மதிக்கவும் அவர்களைத் தூண்டுவித்தது.

நூற்றாண்டு காலமாக இங்கேயே தொடர்ந்து வாழும் ஒரு சமூகமாக இருந்தபோதும் 1948-ல் கொண்டுவரப்பட்ட குடியுரிமைச் சட்டத்தால் இந்த மண்ணிலிருந்து அந்நியப்பட்டு வாழ்ந்தவர்கள் 1986ல் கொண்டுவரப்பட்ட சட்டத்தின் பின்னர் இந்த நாட்டு குடிமக்கள் என்று தம்மை இனம் காட்டுவதற்கு முனைந்தார்கள்.

வளர்ந்து வருகின்ற தனியான தேசிய இனமாக மலையகத் தமிழர் தம்மை நிலைநிறுத்திக் கொள்வதற்கு, இலங்கைத் தீவின் அரசியலில் தம்மை வற்புறுத்தி அடையாளம் காட்டிக்கொள்வதற்கு அவர்களுடைய பழைய வரலாறு தேவைப்பட்டது.

(இலங்கைத் தோட்டப்புற மக்களின் தொழிற்சங்க அமைப்புக்கு வழிகாட்டியும், இலங்கைத்தமிழ்ப்பத்திரிகை தோற்றுவிப்புக்கும்காரணகர்த்தாவாக விளங்கிய மலையகத்தின் நிர்மாணச்சிற்பி தோ. நடேசய்யரைப் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தகவல் வெளிக்கொணரப்பட்டு நூல் வடிவில் வந்தது)

மலையகத்தைப்பற்றிய கற்றறிந்தவர்களின் கவனம் இத்தகு முயற்சிகளுக்குப்பிறகு கூர்மை பெற்றது வெறும் உடல் உழைப்பார்களாக மாத்திரம் கருதப்பட்டு வந்த ஒரு சமூகத்தினராக மலையகத்தமிழர் இந்த நாட்டில் வாழவில்லை என்ற தெளிவு பிறந்தது.

படிப்பைத் தொடர முடியாதபோதும் கவிதையாய்பதில் சாதனைப் புரிந்து வருதலை மலையகத்தில் கண்டு வாழ்ந்தவர்கள், பல்கலைக்கழகம் சென்று, விஞ்ஞான கல்விப்பெற்ற பின்னரும் கவிதைப் புனைவதைத் தொடர்வதை காணும் வாய்ப்பு ஏற்பட்டது.

இந்த புதிய எழுச்சியும், தெளிவும், மலையக இலக்கியத்துக்குப் புதிய பரிணாமத்தை அளிக்கும் வாய்ப்பைக் கொண்டிருக்கின்றன.

மலையக இலக்கியம் என்பது என்ன? சிதைந்து போகும் கனவுகளுக்கு மத்தியிலும் சிதையாமல் இறையிடப்படாமல் தம்மை அடையாளம் காண்பித்துக் கொள்வதில் உடல் வலுவும், உணர்வலை மிகுந்த எந்த மனித ஜீவனும் பின்னிற்பதில்லை. பொது நியதி இதுவாக இருக்கையில், அங்கீகரிக்கப்பட்ட உடல் உழைப்புக்கும், அச்சுறுத்தப்பட்ட உணர்வலைகளுக்கும் பிரத்யட்ச உதாரணமாக விளங்கும் மலையகத்து மக்கள் எவ்விதம் சமைத்தார்கள் என்பதைக் காட்டுவனவாக அமைந்திருப்பதே மலையக இலக்கியமாக உயர்ச்சி பெறுகின்றது.

எண்பதுகளில் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதற்கான ஆதாரங்கள் நிறையவே இருக்கின்றன.

எனினும்

(1) வெளிவராத உலகத்தைப் பற்றிய மின்மினிப்பூச்சின் வெளிப்பாடான சிறுகதைகள்;
(2) அறியப்படவேண்டிய உலகைப் பற்றிய சாளர வெளிப்பாடான கவிதைகள்;
(3) அறிந்து அழிக்கப்படவேண்டிய உலகைப்பற்றிய பூதாகாரமான உண்மைகளடங்கிய நாவல்கள்.

என்று மலையகத்தில் நிறைய படைப்புக்கள் தோன்றுதல் வேண்டும்–

என்னை

"சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ...? இந்த மாநிலம்
வாழ்வதற்கே"

என்ற உணர்வுடன் எழுதுபவர்கள் ஏராளமாக மலையகத்துக்குத் தேவை என்பதை எண்பதுகளில் மலையகத்தின் நிலைமை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● ஜெர்மனியில் பெர்லினில் நவம்பர் மாதம் 91-ல் இரண்டு நாட்கள் நடைபெற்ற ஐரோப்பிய தமிழ் மகாநாட்டில் கோ. நடேசய்யர் நூற்றாண்டு விழா மிகச்சிறப்பாக இடம் பெற்றது. "மலையக இலக்கியப் பாரம்பரியம் நடேசய்யரும் மீனாட்சி அம்மாளும்" என்ற தலைப்பில் மலையக ஆய்வாளரான திரு. மு. நித்தியானந்தன் நினைவுப் பேருரையை நிகழ்த்தினார். திரு. சுசீந்திரன் நடராஜா இதனை முன்னின்று நடத்தினார். இவ்விழாபற்றி 'தமிழன்' பத்திரிகையில் வெளிவந்த செய்தியை இங்கு தருகிறோம்

படத்தில் நினைவுப்பேருரை நிகழத்தும் திரு. மு. நித்தியானந்தன் அருகில் பிரபல எழுத்தாளர் திரு. எஸ். அக்ஸ்தியர் காணப்படுகிறார் ●

ஜெர்மனியில் பெர்லினில்...

கோ. நடேசய்யர் நூற்றாண்டு விழா

"பிரிட்டிஷ் ஆட்சியில் மோசமாக்ச் சுரண்டப்பட்ட மலையகத் தொழிலாளர் மத்தியில் அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் நட்சத்திரமாகத் திகழ்ந்த நடேசஐயர் மலையகத்தின் அரசியல், சமூக, இலக்கிய வரலாற்றில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறார். மலையகத்தின் முதல் தொழிற்சங்கவாதியாகவும், ஈழத்தின் முதலாவது தினசரிப் பத்திரிகையை நடத்திய பத்திரிகையாளனாகவும் சட்டசபையில் இந்தியப் பிரதிநிதியாகவும் ஆற்றல் மிகுந்த எழுத்தாளனாகவும் நடேச ஐயர் திகழ்ந்தார்," என்று நூற்றாண்டு நினைவு விழாவில் உரையாற்றிய மு நித்தியானந்தன் குறிப்பிட்டார்.

நடேச ஐயர் பிறந்த தமிழக மண்ணிலோ உழைத்து மறைந்த மலையக மண்ணிலோ அவருக்குஉயர்ந்த விதத்தில் கௌரவமான விழாக்கள் எடுக்கப்படாத நிலையில் ஜெர்மனியில் இந்த விழா நடைபெறுவது ஒருபுறம் வருத்தம் தருவதும் மறுபுறம் மகிழ்ச்சி தருவதுமாகும்" என்று நடேச ஐயர் நூற்றாண்டு விழாவிற்குத் தலைமைவகித்த ந. சுசீந்திரன் குறிப்பிட்டார்

'மலையக்த்தின் எழுத்து வழி இலக்கியத்தின் மூலவர் நடேசஐயரே ஆவார். "திரு. இராமசாமிச் சேர்வையின் சரித்திரம்" என்ற நடேசஐயரின் சிறுகதை தான் மலையகத்தின் முதலாவது சிறுகதை என்ற அந்தஸ்தைப் பெறத்தக்கது. நடேசஐயரைப் பற்றிய ஆய்வுகள் இப்போதுதான் முக்கியத்துவம் பெறுகின்றன. சாரல்நாடன், அந்தனிஜீவா ஆகிய எழுத்தாளர்கள் நடேசஐயரின் பணிகளை ஆய்வதிலும், அவரது பணிகளை மக்களறியச் செய்வதிலும் மிகுந்தஈடுபாடு காட்டி உழைத்து வருகிறார்கள். நடேசஐயரின் வரலாற்று முக்கியத்துவத்தை மதிப்பிடும்போது மலையகத் தொழிலாளர் மத்தியில் நடேசஐயரின் வருகை ஒரு வெளியாளின் வருகைதான் என்பது உணரப்படவேண்டும் அதே சமயம் அவரது சாதனைகளை இதற்காகக் குறைத்து மதிப்பிட வேண்டியதுமில்லை" என்று மு. நித்தியானந்தன் தனதுரையில் குறிப்பிட்டார்.

'பொதுமக்கள் சார்ந்த கூத்து, நாடகங்கள் அனைத்தையும், ஆறுமுகநாவலர் நிராகரித்து பொது மக்களுக்கு எதிரான ஒரு இடத்திலேயே அவர் தன்னை இனங் கண்டார். கல்வியறிவில்லாத மக்களுக்கு கடவுளைத் துதித்து மீளும் பாக்கியம்கூட இல்லை என்ற அளவிற்கு உயர்குடி மேட்டிமைத்தனத்தின் பிரதிநிதியாக நாவலர் விளங்கியபோது தஞ்சை அக்கிரஹாரத்து மனிதரான நடேசஐயரோ அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்ட அடிமைப்பட்ட நிலையில் உழன்ற மக்களின் மத்தியில் நின்று அவர்களின் நலனுக்காகப் போராடிய ஒருமகனாக நடேசஐயர் உயர்ந்து நிற்கிறார்" என்று நித்தியானந்தன் தனது உரையில் மேலும் குறிப்பிட்டார்.

இங்கிலாந்து, பிரான்ஸ், நெதர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த இலக்கிய ஆர்வலர்கள் பெருமளவில் திரண்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

மணம் இழந்த மலர்கள்

செல்வி
திலகா பழனிவேல்

இலக்கியத்துறையில் ஆர்வமிக்க செல்வி திலகா பழனிவேல் பயிற்றப்பட்ட ஆசிரியை. கதை, கவிதை, கட்டுரை என்று எழுதிவருகிறார் மலையகம் கல்வியில் முன்னேறவேண்டும் என்று கூறும் இவர் ஆசிரியப்பணியில் ஈடுபட்ட காலந்தொட்டு பல திறமைசாலிகளை உருவாக்கி வருகிறார்

ஊ... ஊ.. ஊ.. சங்கொலி கேட்டு திடுக்கிட்டு விழித்தாள் அமுதா. ''ஐயையோ ஆறரை மணி ஆயிடுச்சே'' என்று எழுந்தவளின்பார்வையில் அலங்கோலமாய் கால்களை அங்கொன்றும் இங்கொன்றுமாய் பரப்பி 'ஆ' வென வாயை திறந்து தூங்கிக்கொண்டிருந்த ஜெக்நாதன் கண்ணில் பட்டான். ''இந்த ஜென்மம் என்னைக்கு திருந்தப் போகுதோ..'' என்று மெதுவாக முணுமுணுத்து பெருமூச்சு விட்டவளாக கதவைத் திறந்து கொண்டு வெளியேறினாள்.

காலைக் கடன்களை முடித்துக் கொண்டு ஒரு கோப்பையில் தேனீரை ஊற்றி வைத்துவிட்டு இன்னொரு கோப்பையில் தேனீருடன் உள்ளே போனாள். அந்த எட்டடிக் காம்பராவின் ஒரு எட்டத்தில் கிழிந்த கம்பளிப் போர்வையால் உடலை மூடியும் மூடாமலும் முடங்கிகிடந்தாள் வேலம்மா. ''அம்மா..அம்மா...எழுந்திரும்மா தேத்தண்ணி வச்சிருக்கேன் எழும்பி குடி நேரமாச்சி'' என்றபடி திரும்பியவளை ''அண்ணா எழும்பிட்டானா அமுது?'' என்ற தாயின் குரல் தடுத்தது. ''ம்.. அது இன்னும் தூங்குது. நீயே எழுப்பிக்க'' என்றபடி அடுக்களையை நோக்கி நடந்தாள் அமுதா.

மலையகத்துக்கே உரிய காலை நேர ரொட்டி வாசனை எங்கும் பரவியது. அதில் அமுதாவும் பங்கெடுத்துக்கொண்டவளாய் இயங்கிக் கொண்டிருந்தாள். மீண்டும் சங்கொலி கேட்க ''அம்மா.. சாப்பாடு செஞ்சி வச்சிருக்கேன் சாப்பிடு அவ்னையும் சாப்பிடச் சொல்லு எனக்கு நேரமாச்சு இப்பவே போனாத்தான் ஏழாம் நம்பர் மலைக்கு போக சரியா இருக்கும். இல்லாட்டி அந்த கண்ணாடிக்காரன் கிட்ட ஏச்சுதான் வாங்கனும்' என்றபடி மலையை நோக்கி விரைந்தாள்.

மாசி மாதப் பனிப்புகார் அந்த உயர்ந்த மலைகளை லாவகமாக ஸ்பரிசித்துக் கொண்டிருந்தது பச்சை பட்டாடை விரித்தாற்போலிருந்த தேயிலைச் செடிகளின் மீது இடையிடையே பரவியிருந்த நீர்த் துளிகள் கதிரவனின் பொற்கதிர்களின் தழுவலால் வைரங்களாக பிரகாசித்துக்கொண்டிருந்தன.

பனிக் குளிரில் நடுங்கி நடுங்கி விரைவாக நடந்துகொண்டிருந்த அமுதாவின் பாதங்களை பாதையில் கிடந்த கற்களும் முட்களும் பதம் பார்க்கத் தவறவில்லை. இது அவளுக்கு புதியதல்லவே. அதனை சிறிதும் லட்சியம் செய்யாது விரைந்துகொண்டிருந்தவளின் கண்கள் மட்டும் அந்த இயற்கை எழிலை பருகத் தவறவில்லை.

அழகே உருவாக உயர்ந்த அந்த பச்சை மலையின் இடையிடையே பல பங்களாக்களின் முகடுகள் எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தன. அவை ஒரு மங்கையின் அழகு வதனத்தில் பருக்கள் தோன்றி இருப்பது போல தோற்றமளிக்க... தன் கற்பனைக்கு தானே ஒரு பேஷ் போட்டுக்கொண்டவள் ''ம்— எத்தனை தான் திரும்பத் திரும்ப பார்த்தாலும் இந்த அழகு சலிப்பே தட்டுவதில்லையே'' என எண்ணி வியந்தவாறு நடந்தாள்.

மாதர்களின் தளிர் கரங்கள் தேயிலைத் தளிர்களை பரபரவென கொய்து கொண்டிருந்தன. அதில் அந்த பதினைந்து வயது இளையவளின் கரமும் பங்கேற்றுக் கொண்டிருந்தது. அப்போது அருகே இருந்த பாடசாலையில் தண்டவாளத் துண்டோடு ஒரு இரும்புத் துண்டு மோதி மோதி எழ டாங்.. டாங்.. என்ற ஓசை எழுந்தது. அமுதாவின் பார்வைக் கணைகள் அவ்விடத்தை நோக்கி பறந்தன. வெள்ளை முயல்கள் துள்ளி ஓடி ஓரிடத்தில் சேருவது போல பள்ளிக் குழந்தைகள் பிரார்த்தனைக்காக பாடசாலையின் சிறு முற்றத்தினை நோக்கி சென்றுகொண்டிருந்தனர். அமுதாவின் விழிகளில் ஆவல் தெறிக்க.. அவளது நினைவுப் பாதங்கள் தடம் மாறி பின்னோக்கி தாவிப் பாய்ந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது ஒரு வைகாசித் திங்கள். மழை தொண தொணவென பெய்து கொண்டிருந்தது. ஆங்காங்கே மண் சரிவுகள் ஏற்பட்டுபோக்குவரத்து தடைப்பட்டு விட்டிருந்தன. தொழிலாளர்கள் பாதையை சரிப்படுத்த மண்ணை அள்ளி பள்ளங்களில் கொட்டிக் கொண்டிருந்தனர். திடீரென ''ஆ... ஊ.. அம்மா... முருகா...'' என்ற பலவிதமான அலறல் ஒலிகள் அப்பிரதேசத்தையே கிடுகிடுக்க செய்தது. பாதையை சீர்படுத்திக்கொண்டிருந்த தொழிலாளர்களின் மீது சரிந்த மலையை ஒட்டிய எஞ்சிய மறு பகுதி சரிந்து விழ... பல உயிர்கள் பரலோகத்தை நோக்கி பறந்து கொண்டிருந்தன. அவர்களுடன் அங்கே பல கனவுகளும் பலரது மாங்கல்யங்களும் மடிந்து மண்ணில் புதையுண்டுக் கொண்டிருந்தன.

மின்னல் வேகத்தில் செய்தி தோட்டமெங்கும் பறந்தது. அதில் மாங்கல்யத்தை இழந்த வேலம்மா அலறியபடியே தான் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த மலையை விட்டு அவசர அவசரமாய் இறங்க முற்பட்ட வேளை தேயிலைச் செடியின் வேரில் தடுக்கி விழுந்து தன் கால்களில் ஒன்றையும் இழந்து முடமாகினாள். பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பது தான்எத்தனை உண்மை.

அப்போது அமுதா எட்டாம் ஆண்டிலும் ஜெகநாதன் 11ம் ஆண்டிலும் கல்வி கற்றுக்கொண்டிருந்தனர். மிகத் திறமைசாலிகள் என்று பாடசாலையே போற்றும் அந்த இருவரது கனவுகளும் அங்கே புதையுண்டுக் கொண்டிருப்பதை அறியாது அவர்கள் படிப்பில் கவனம் செலுத்திக்கொண்டிருந்தனர். அவ்வேளை செய்தி வந்தது. இருவரும் வைத்தியசாலையைநோக்கி பறந்தனர் உயிரிழந்த தந்தையையும் ஊனமான நிலையில் தாயையும் கண்ட அந்த பிஞ்சு உள்ளங்கள் பதறித் துடித்தன.

டாக்டராக வர வேண்டும் என்ற கனவோடு கற்றுக்கொண்டிருந்தவன் காலு வெட்டும் கவ்வாத்து வெட்டும் கூலிக்காரனாக ஆனதோடு பெருங் குடி மகனாக்வும் மாறிவிட்டான். ஒரு நல்ல ஆசிரியையாய் வந்து மலையகத் தாயின் எதிர்காலம் சந்ததிக்கு வழிகாட்ட வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்த அந்த பிஞ்சுப் பெண் அரும்பு மலையேறி தூல் மரக்க.. பசுந் தளிர் பறித்து விரல் மறுக்க... பரம்பரைத் தொழிலில் பாத்திரமேற்று...பல மாத மேகங்கள் மோதி வருட மின்னல்கள் வெடித்து சிதறிக்கொண்டிருந்தன.

''என்னா... அமுதா அப்படி என்னா ஸ்கூலையே வெறிச்சு பார்த்துக்கிட்டிருக்கிற. இன்னும் ஒனக்கு படிக்கிற ஆசை போகலையா? ம்... ம்... வேலையை கவனி'' என்று அதட்டியபடியே அவள் அருகே வந்த கங்காணி அவளது நிலையை உணர்ந்து ''ஏம்மா... இனியும் பழச எல்லாம் நெனச்சி கவலைப்படாதம்மா. அவனவனுக்கு எது எதுன்னு அந்த ஆண்டவன் அளந்து வைச்சானோ அதுதாம்மா கெடைக்கும்'' என்று ஆறுதல் சொன்னார்.

கங்காணியின் குரல் கேட்டு சுய நினைவடைந்த அமுதா விழிகளில் பூத்து கன்னங்களில் உதிர்ந்து கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு கடமையைத் தொடர்ந்தாள்.

★

பெண்களுக்கு விடுதலை கொடுத்ததனால் ஜனசமூகம் குழம்பிப் போய்விடும் என்று சொல்லுவோர், பிறர் தமது கண்முன் சுயேச்சையுடன் வாழ்வதைத் தாம் பார்க்கக் கூடாதென்று அசூசையினால் சொல்லுகிறார்களே யொழிய வேறொன்றுமில்லை

மகாகவி பாரதியார்

தீவிரமாக போராட வேண்டும்

மீனாட்சியம்மாள் வேண்டுகோள்

இலங்கை வாழ் இந்தியர்களின் நிலைமை வர வர மிக்வும் மோசமாகிக் கொண்டே வருகிறது. இலங்கைவாழ் இந்திய மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்களது உரிமைகளை நிலைநாட்டுவதற்காக தீவிரமுடன் போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. இந்திய மக்களுக்கு எதிர்காலத்தில் வரவிருக்கும் ஆபத்தை உணர்த்தி அவர்களிடையே அதிலும்முக்கியமாக இந்தியத் தோட்டத்தொழிலாளர்களிடையே பிரசாரம் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். அத்தகைய பிரசாரம் பாட்டுகள் மூலமாகச் செய்யப்படின் அதிக பலனளிக்கும். இதை முன்னிட்டே இன்று இலங்கைவாழ் இந்தியர்களின் நிலைமையைப் பாட்டுக்களின் மூலம் எடுத்துக் கூற முன்வந்துள்ளேன். இந்தியர்களை தூக்கத்தில் ஆழ்ந்து விடாது தங்களது உரிமைகளை நிலைநாட்டுவதற்கு தீவிரமாகப் போராடும்படி அவர்களை இப்பாட்டுக்கள் தட்டியெழுப்ப வேண்டுமென்பதே எனது அவா.

(1940-ம் ஆண்டு அட்டன் கணேஷ் பிரஸில் அச்சிடப்பட்ட திருமதி மீனாட்சி அம்மாளின் 'இந்தியர்களது இலங்கை வாழ்க்கையின் நிலைமை'' என்ற நூலின் முன்னுரை..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹைக்கூ வடிவக் கவிதைகள்

குறிஞ்சியில் ஒருவனின் குரல்

எஸ். மனுவேல் ஆசீர்வாதம்

அடைபட்ட சேவல்
கூடைக்குள்ளேயே கூவுகிறது
குறிஞ்சியில் ஒருவனின் குரல்

●

பாலைவனத்தில்
வற்றாத ஊற்று
ஏழையின் கண்ணீர்

●

மரணத்தை நோக்கி
நாட்களை நகர்த்துகிறான்
மணிக்கூடு

●

அதிகாரி வரும்முன்னே
அணிவகுப்பு நடக்கிறது
எறும்பு

●

காரில் சென்று கைகாட்டி
காசுவாங்கும் பிச்சைக்காரர்கள்
தொழிற்சங்கவாதிகள்

●

நாய்களுக்கு கூட
மெய்காப்பாளர்கள்
நிழல்

●

பாதையில்லா இடத்தில்
ரயில் பெட்டிகள்
லயன்கள்

●

ஏறக்கொடுத்து அண்ணாந்து பார்க்கும்
ஏணிப்படிகள்
தொழிலாளர்கள்

●

பெற்ற உரிமை! வாழ்பவர்கள்
பிறர் வானில் பறக்க
ஜனநாயகம்

●

வீட்டுக்குள்ளேயே திருடன்
இனியாரை நம்புவது
பூனை

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அரசியல் உரிமைகள்

—கலாநிதி குமாரி ஜயவர்தனா—

1930ஆம் ஆண்டுகளிலிருந்து இன்றுவரையும், இலங்கையின் பெருந்தோட்டத் துறையின் வரலாறானது இந்திய வம்சவழித் தொழிலாளரின் பொருளாதார, சமூக நீதிகளையும் அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் மறுப்பதாகவே அமைந்துள்ளது. இத்தொழிலாளர்களே தேயிலை, இறப்பர், ஆகிய இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருள்களுக்காக உழைத்து நாட்டின் அந்நியச் செலாவணியில் பெரும்பகுதியை ஈட்டித் தருவோர். இவர்களின் உரிமைகளைப் பறித்தல் பலவழிகளிலும் நடைபெற்றது. வாக்குரிமையை படிப்படியாக அவர்களிடமிருந்து பறித்ததால் பாராளுமன்ற மட்டத்திலும் உள்நாட்டு நிர்வாகத்திலும் அவர்கள் தமது பிரதிநிதித்துவத்தை இழந்தனர். இவர்களிற் பெருந்திரளானோர், நாடற்றவராகி, நாட்டு மக்களின் ஏனையபிரிவினருக்கு உள்ள சம்பளம் கல்வி, சமூக, சுகாதார வசதிகள் இவர்கட்கு மறுக்கப்பட்டு இந்தியாவுக்கு குடி பெயர நிர்ப்பந்திக்கப்பட்டனர். இவர்கள் 1970ஆம் ஆண்டுகளின் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டு இறுதியாக 1977, யூலை 1983ஆகிய காலங்களில் இனக் கலவரத்தால் ஏற்பட்ட அரசியல் எதிர்ப்புகளையும், 1928–1948 காலப்பகுதியில் சிங்களவர் மத்தியில் இனவாதக் கருத்தியலாக்கத்தின் வளர்ச்சியையும் இறுதியில் 1948ஆம் ஆண்டு அவர்கள் குடியுரிமையை இழந்தமையையும் இங்கு நான் சிறப்பாக எடுத்துக்காட்டுவேன்.

தோட்டத் தொழிலாளரை அரசியலில் இருந்து வெளியேற்றுதல் 1920களின் பிற்பகுதியில் சிங்கள பூர்ஷ்வாக்களால் தலைமை தாங்கப்பட்டது. வர்க்க உணர்வுகொண்ட தோட்டத் தொழிலாளர், இலங்கையின் ஏனைய தொழிலாளர்களுடன் இணைதல், நிலவும் சிங்கள சமூக அமைப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் என்பதை உணர்ந்த சிங்கள அரசியல்வாதிகள் தம் பலம் நாட்டில் குறைந்துவிடும் எனப் பிரச்சாரம் செய்தனர்.

1920களின் பிற்கூற்றில் இந்தியத் தொழிலாளரின் அரசியல் உரிமைகட்கெதிராக இனவாதம் பிரசாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள அரசியல்வாதிகளால் முதன் முதலில் மேற்கொள்ளப்பட்டது. எனினும் ஏ. ஈ. குணசிங்கவின் ஜனநாயகத் தலைமையில் இன ஒற்றுமை, வர்க்க ஒருமைப்பாடு ஆகியவை உச்சநிலையில் இருந்த காலகட்டத்தில் சிங்களத் தொழிலாள வர்க்கம் தோட்டத் தொழிலாளருக்கெதிரான நடவடிக்கைகளை வன்மையாக எதிர்த்தது. இப்பிரச்சனை தொடர்பாக குணசிங்காவின் கொள்கைகள் மாறியபோது 1930களிலும் 1940களிலும் இடதுசாரிகள், இனவாதமற்ற தலைமையை அளித்து நகரப் பகுதியிலும் தோட்டத்துறையிலும் இந்தியத் தொழிலாளரின் உரிமையை நசுக்கும் நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் எதிர்த்தனர். தொழிலாளரின் குடியுரிமை, வாக்குரிமைப் பிரச்சினையில் 1928—48க்கும் இடையில் தொழிலாள வர்க்கக் கட்சிகள் தோட்டத் தொழிலாளரையே மிக உறுதியாக ஆதரித்தன. ஆனால் பூர்ஷ்வாக்க் கட்சிகளோ இவர்களது உரிமைகளைப் பறிக்கவே தொடர்ந்து பிரசாரம் செய்தன.

இந்நூலின் முற்பகுதியில், சிங்கள-பௌத்த உணர்வின் உருவாக்கத்தையும் அதன் விளைவாக பௌத்தரல்லாத கிறிஸ்தவ, முஸ்லிம், மலையாளிகளுடன் ஏற்பட்ட முரண்பாட்டையும் ஆராய்ந்தேன். எல்லாச் சந்தர்ப்பத்திலும் இன முரண்பாடு இச்சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறையாகக் கிளர்ந்தது. எனினும் இன எதிர்ப்புகள் மக்களுக்கும் சொத்துக்களுக்கும் எதிராக வன்முறையாக மாத்திரமின்றி, தோட்டத் தொழிலாளரைப் பொறுத்தவரை, சிறுபான்மைக் குழுவின் அடிப்படை மனித, குடியியல் உரிமை மறுப்பாகவும் வளர்ச்சியடைந்தது.

1830களிலிருந்து 1930 வரை இந்தியத் தொழிலாரின் வருகை கணிசமான அளவு அதிகரித்தபோதிலும் ''இந்தியப் பிரச்சனை'' இக்கால கட்டத்தில் சிங்களவரின் எதிர்ப்பின்மை மையப் பொருளாக இருக்கவில்லை, 1911 ஆம் ஆண்டு இந்தியத் தமிழரின் தொகை 530,000 ஆக இருந்தது. 41 லட்சமான மொத்த குடித்தொகையில் இவர்கள் 12.9 வீதத்தினராவர் இவர்களில் மிக்ப் பெரும்பாலார் தோட்டத்தொழிலாளரும் அவர்களைச் சார்ந்தோருமே ஏனையோர் நகரத்தில் வேலை செய்பவர்களும் வியாபாரிகளுமாவர். 1921இல் இவர்களது எண்ணிக்கை 602,000 ஆக அதிகரித்தது. இவர்களிற் 536,000 பேர் தோட்டத் தொழிலாளரும் அவர்களை சார்ந்தோருமாவர். இவ்வாறு பெருந்தொகையாக இலங்கையில் குடியேறுவது இலங்கை மக்களுக்கு ஆத்திரமூட்டியது, வெறுப்பையும் காட்டினர். ஆயினும் 1880ஆம் ஆண்டுகளிலிருந்து சிங்கள பௌத்தர்களின் எதிர்ப்புக்கு இலக்கானோர் இந்தியத் தமிழரை விட எண்ணிக்கையில் குறைவாக இருந்த வசதி பெற்ற சிறுபான்மையினரே.

பல இலட்சக் கணக்கான இந்தியத் தொழிலாளரின் வருகை சிங்களவரது எதிர்ப்பைச் சம்பாதிக்கவில்லை என்று கூறுவது பிழையாகும். அனகாரிக தர்மபாலா, இந்தியத் தொழிலாளர் பற்றிய இகழ்ச்சி குறிப்புகளை அடிக்கடி கூறினார், உதாரணமாக 1902ஆம் ஆண்டு அவர் ''ஆங்கிலேய நிர்வாகத்தில் தென்னிந்தியாவின் கீழ்சாதியினர் எமது தீவில் குடியேற அனுமதிக்கப்படுகின்றனர்'' என்றார். இதே போல தோட்டத் தொழிலாளர் பற்றி சிங்களத் தலைவர் குற்றம் சாட்டினர். 'கூலி' என்ற சொல் அவர்களை அவமதிக்கும் சொல்லாகவும் பயன்பட்டது.

தோட்டத்துறையின் அமைப்பு இந்த ''அடிமை முறையின் அடிமை உழைப்பு புதிய வடிவத்தை'' நோக்கியதாய் அமைந்துள்ளது. இங்கு கொண்டுவரப்பட்ட இந்தியத் தொழிலாளர்கள் பல்வேறு அடக்குமுறைக்கு உட்பட்டனர்; வேலை பிரித்தானிய நிர்வாகத்தின் இராணுவ முறை ஆதிக்கத்துக்கும் கங்காணியின் தந்தை முறையான பரம்பரைக் கட்டுப்பாட்டுக்கும் அடக்கி ஒடுக்கும் சட்டங்களையும் பொலிசையும் கொண்ட காலனித்துவ அரசு யந்திர வன்முறைக்கும் ஆளாகினர். தொழிலாளர்கள் தோட்டங்களில் 'லைன் (Lines) அறைகளில் வைக்கப்பட்டு, திரும்பி ஓடிவிட முடியாது தோட்டப் பாதுகாப்புச் சேவையாலும், நாட்டின் சட்டங்களாலும் தடுக்கப்பட்டிருந்தனர். அவர்களது சுகாதார, கல்விநிலைமைகள் மிக மோசமாயிருந்தன. அவர்களது சம்பளம் 1927ஆம் ஆண்டு வரையும் ஒரு நாளுக்கு ஆண்களுக்கு 33 சதமாகவும் பெண்களுக்கு 25 சதமாகவும் இருந்தது. (ரூபா - 100 சதம்)

எவ்வாறாயினும் இன உறவுகளைப் பொறுத்தவரையில் மிக முக்கியமான அம்சம் தோட்டத் தொழிலாளர்களுடைய வேலைக்குச் சிங்களவர்கள் போட்டியிடவில்லை என்பதாகும். தமது இனம், சமயம், அந்தஸ்து பற்றிய பெருமித உணர்ச்சியால், 'கூலி' என்ற நிலைக்குத் தள்ளப்படும் தோட்டத் தொழிலாளர் வேலையை அவர்கள் மறுத்தனர் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு ஐதீகமாகும். தோட்டத்துறை முதலாளித்துவத்தின் வருகைக்குப் பின்னரும் சிங்கள விவசாயிகள் சிறு நிலமாவது உடையவராய் இருந்ததினாலேயே தோட்டங்களில் கூலித் தொழிலாளராய் வேலை செய்ய அவர்கள் மறுத்தனர் என்பதை சமீபகால ஆய்வுகள் காட்டுகின்றன. சுருக்கமாகக் கூறுவதானால் சிங்களவர் எவ்வித வாய்ப்புமற்ற பாட்டாளிகளான தோட்டத் தொழிலாளரது நிலைக்கு தள்ளப்படவில்லை என்பதேயாகும்.

எனவே, 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும், தோட்டத் தமிழர்கள் இனவெறி வன்செயலுக்கு ஆளாகவில்லை. இந்தியாவுக்கு அவர்களைத் திருப்பி அனுப்பும்படி எவரும் கிளர்ச்சிசெய்யவுமில்லை. வேலையைப் பொறுத்து போட்டி ஏற்படுத்தாமல், அரசியல் பொருளாதர உரிமை அற்று, தொழிற் சங்கங்களோ வேறு இயக்கங்களோ இல்லாத மலைநாட்டில் பூகோள ரீதியாகத் தனிமைப்பட்டு, சிறைப்பட்ட தொழிலாளராக இருக்கும்வரை, அவர்களது எண்ணிக்கையைப்பற்றி எவரும் கவலைப்படவில்லை; அவர்கள் எத்தகைய கண்டிப்புக்கும் ஆளாகவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏய்? எக்கா? எய்யா?

மிகவும் புத்தி கூர்மையான பிராணி ஒன்றைப் பற்றி கூறுங்களேன்!

சிம்பன்ஸி குரங்குதான்.. அதற்கு அமெரிக்காவில் சைகை பாஷை கற்றுக்கொடுத்து சுமார் இருநூறு வார்த்தை 'வொகபிலேரி' யில் அதனுடன் ஜோக் அடித்துக்கொண்டு பேசிக்காட்டியிருக்கிறார்கள். ஆராய்ச்சியாளர்கள். கம்ப்யூட்டரை வைத்துக் கொண்டும் பரிசோதனை செய்திருக்கிறார்கள். சிம்பன்ஸிக்கு 'பொப்' சங்கீதத்தைவிட ஜாஸ் பிடிக்கிறதாம். குரங்குகளைப்பற்றிய வீடியோவை அதிகம் போட்டு ரசிக்கிறது. இப்படிபழகிக்கொண்டு போனால் இன்னும் இரண்டு தலைமுறைகளில சிம்பன்ஸி குரங்குகள் தொடர்கதைகள்கூட எழுத ஆரம்பித்துவிடலாம் என்கிறார்கள்.

★ கொரில்லாக்களைப் பற்றி..

கொரிக்கல்லாக்களுக்குசற்றே உள்ளடக்கிய மூக்கு பிரமாண்டமான க்றுப்பு உருவம்... ஆறு அடி ஏழு அடி என்று வளர்த்தி.. 275 கிலோ எடை இருக்கலாம்.. இரும்பு மாதிரி கை கால்கள் தலைத்தாழ்த்தி நட்புணர்வுடன் ஒரு பார்வை.. உற்சாகமாக சமயத்தில் படபடவென்று தன் மார்பை இரண்டு கைகளாலும் தட்டிக்கொள்ளும் இதுதான் வயதுக்கு வந்த ஆண் கொரில்லா..

கொரில்லாக்கள் சுத்தசைவம். முட்டைகூட சாப்பிடாது. கூட்ட கூட்டமாய் வாழ்கிற குடும்ப மனசு.. சாம்பல் மூட்டையைச் சுமந்தாற்போல முதுகில் வெள்ளி கலர் உள்ள ஜயண்ட் கொரில்லாக்கள்தான் கூட்டத்துக்கு ராஜா. எந்த தாக்குதல்களுக்கும் ஈடு கொடுக்கிற தைரியமும் பலமும் உண்டு. நடை, பாவனைகள் சாப்பிடுகிற ஸ்டைல் போன்ற பல விஷயங்கள் மனிதர்களைப் போல.. வீண் சண்டைக்கு எல்லாம் போகாது.

★ கண்ணீர் எங்கிருந்து எப்படி?

கண்ணீர் என்பது உப்பு நீர் என்பது தெரிந்ததே. கண்ணுக்கு மேலாக நம் கண்ணில்படாத மறைவாக லாக்கிரிமல் கிளாண்ட் (LACHRYMAL GLAND) என்று ஒரு சுரப்பி. இதுதான் கண்ணீரின் மூலம். இந்த சுரப்பி சுரக்கிற லாக்கிரமோ என்ற திரவம்தான் நம் நெஞ்சை நெருட வைக்கும் கண்ணீர்.

★ பறவை பூச்சிகளுக்கு நம் உடலுக்குள் இருப்பதெல்லாம் உண்டா..?

இருக்கிறதே... மண்ப்புழுவுக்குகூட இதயம் இருக்கிறது.

★ மனிதனின் அதிக உயரம் எவ்வளவு? குள்ளமாய் இருப்பதற்குக் காரணம் என்ன?

ஏழரை அடிவரை உயர ஆசாமி இருக்கிறார்கள். குள்ளமாக இருப்பதற்கு காரணம் பிட்யூட்டரி சுரப்பிகளின் கோளாறுதான். பதினெட்டு வயசுக்கு மேல் வளருவது கஷ்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த பொழுது தொட்டில் இல்லை, இறந்த பொழுது சவப்பெட்டி இல்லை!

சர்வதேச மகளிர் ஆண்டில்

போற்றுதலுக்குரிய பெண்மணி

இன்று கார்ல் மார்க்ஸை தெரியாதவர்கள் யாருமே இல்லை. வரலாற்றில் அவருக்கு உன்னத இடம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவரது அனைத்து பணிகளுக்கு காரணியாக இருந்த மாதர்குல மாணிக்கம் தான் ஜென்னி மார்க்ஸ்.

மார்க்ஸ்-ஜென்னியின் காதலும் குடும்ப வாழ்க்கையும் எண்ணற்ற வேதனைகளையும் சோதனைகளையும் கண்ட போதும் அவற்றையெல்லாம் கண்டு மனஞ்சோர்ந்துவிடாமல் மார்க்ஸை தூண்டிவிட்டவர் ஜென்னி.

மார்க்ஸும் ஜென்னியும் ஜெர்மனியிலிருந்தும் பிரான்ஸிலிருந்தும் பெல்ஜியத்திலிருந்தும் மாறி மாறி விரட்டப்பட்டனர். "நாங்கள் எங்கு சென்றாலும் தொழிலாளர் வர்க்கத்தின் விடுதலை என்பதே எங்கள் லட்சியமாகும்." என்று முழக்கமிட்டார் மார்க்ஸ். அதில் ஜென்னியின் குரலும் அடங்கியிருந்தது.

மார்க்ஸ் தம்பதிகளின் சின்னஞ் சிறுமகள் பிரான்சிஸ்கா மரணமடைந்த பொழுது மார்க்ஸும் ஜென்னியும் அந்த மழலைச் செல்வத்தைப் புதைப்பதற்கு சவப்பெட்டி கூட வாங்க வழியின்றி தவித்தனர். அந்த வேதனை சம்பவத்தை ஜென்னி விவரிக்கிறார்

"1852 ஈஸ்டர் பண்டிகையின் போது எங்கள் சிறு பிரான்சிஸ்காவிற்கு கடுமையான மார்ச்சளி ஏற்பட்டது. மூன்று நாட்கள் அவள் வாழ்விற்கும் சாவிற்கும் இடையே போராடினாள். அவள் மிக பயங்கரமாக அல்லல்பட்டாள். அவள் மரணமடைந்த போது அவளது உயிரிழந்த சிறு உடலைப் பின்னறையில் விட்டு விட்டு, முன்னறைக்குச் சென்று தரையில் படுக்கைகளை விரித்தோம். உயிருடன் இருந்த எங்கள் குழந்தைகள் மூவரும் எங்கள் அருகில் படுத்திருந்தனர். அந்தச் சின்ன தேவதைக்காக அவளுடைய கன்றிப்போன உயிரிழந்த உடல் அடுத்த அறையில் கிடத்தப்பட்டு இருந்ததோ அவளுக்காக எல்லோரும் அழுதோம் நாங்கள்கடுமையான வறுமைத் துயரில் மூழ்கியிருந்தகட்டத்தில்தான் இந்த அருமைக்குழந்தையின் மரணம் நிகழ்ந்தது. அந்தச் சமயத்தில் எங்களது ஜெர்மன் நண்பர்களால் எங்களுக்கு எவ்வித உதவியும் செய்ய முடியவில்லை. அந்தக் காலக்கட்டத்தில் அடிக்கடி வந்து பல நாட்கள் தங்கிச் சென்ற எர்னஸ்ட் ஜோன்ஸ் உதவி அளிப்பதாக வாக்களித்தார். ஆனால் அவரால் எதையும் கொண்டுவரமுடியவில்லை. நெஞ்சம் ஆறாத்துயரால் வெடிக்க எங்களுக்கு அருகில் வாழ்ந்து வந்த, எங்களை அடிக்கடிவந்து காணும் பிரெஞ்சு அகதிஒருவரைத் தேடிவிரைந்து இந்த முக்கியமான தேவை ஏற்பட்டுள்ள நிலையில் உதவிபுரியும்படி இறைஞ்சினேன். அவர் சினேகபூர்வமான ஆதார உணர்வோடு உடனடியாக இரண்டு பவுண்களை கொடுத்தார். அந்தப் பணம் சவப்பெட்டி வாங்குவதற்கு பயன்படுத்தபட்டது. அதில்தான் என் குழந்தை நிரந்தர அமைதியில் நிலைகொண்டிருக்கிறது. அவள் இந்த உலகத்திற்கு வந்தபோது அவளுக்கு தொட்டில் இருக்கவில்லை. இறந்தபொழுது அமைதிபெறும் இடமும் வெகு காலம் மறுக்கப்பட்டது. அவளது உடல் இடுகாட்டுக்குத் தூக்கிச்செல்லப்பட்டதைத் துயரத்தால் கனத்து விட்ட எத்தகைய இதயத்துடன் நாங்கள் பார்த்திருந்தோம்./...

மார்க்ஸின் பணிகளுக்கெல்லாம் ஜென்னி உதவியாக இருந்தார். மார்க்ஸ் 'மூலதனம்' என்ற நூலை எழுதியபொழுது அந்தக் கையெழுத்து பிரதிகள் அனைத்தையும் பல முறை நகல் எடுக்க வேண்டியதாயிற்று. ஜென்னி உற்சாகத்துடன் இந்த வேலைகளைச் செய்தார்.

ஜே.ஜேஸ்கொடி

மனிதனை மனிதன் சுரண்டாத கொடுமைப்படுத்தாத புதிய சமூகத்தை படைப்பதற்கான போராட்டத்தை தன் கணவன் நடத்தி வருகிறார் என்கிற பெருமித உணர்வே ஜென்னியின் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. மார்க்ஸ் வேதனைப்பட்ட நேரத்தில் எல்லாம் தன் வேதனையை வெளிப்படுத்தாமல் இதமான சொற்களால் அவருடைய உள்ளத்தை ஆறுதலடையச் செய்தார்

ஜென்னி மீது மிகுந்த பாசம் மாத்திரமல்ல அவரின் புத்திகூர்மை விமர்சனத்திறன் ஆகியவற்றைக் குறித்து பெரும் மதிப்பு வைத்திருந்தார். அதனால் தன் கையெழுத்து பிரதிகளைக் காட்டி அவரது கருத்துக்களை கேட்பார் அதனை வெகுவாக மதிப்பார்

மார்க்ஸின் ஜீவஒளியாக விளங்கிய ஜென்னி 1881 டிசம்பர் 2 ம் தேதி உயிர் நீத்தார் அவரின் இழப்பு மார்க்ஸை பெரிதும் பாதித்தது அதன் பின்னர் பதினைந்து மாதங்கள்தான் மார்க்ஸ் உயிர் வாழ்ந்தார் கார்ல் மார்க்ஸின் உடல் ஜென்னிக்கு அருகே புதைக்கப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பெண்ணடிமை தீருமட்டும்
மண்ணடிமை தீராது''

—மகாகவி பாரதியார்

''இப்படி இந்தப் பக்கம் கொஞ்சம் ஒருக்களிச்சிபடும்மா'' ஒத்தடம் கொடுத்துக்கொண்டிருந்த சாம்பல் பொட்டலத்தை உள்ளங்கையில் அமர்த்திச் சூடுபார்த்தபடியே கைத்தாங்கலாக மகளின் இடுப்பை அணைத்து, 'ம்...ம்' என்றாள் தாயம்மா கிழவி.

கிழவியின் ஒத்தாசையுடன் தனது முழுப்பலத்தைத் திரட்டி முயன்றும் திரும்ப முடியாது போக இந்த எத்தனிப்பில் வெடவெடக்கும் கால்களை கயகட்டுப்பாட்டில் நிறுத்த முடியாமல் வெறுமையுடன் தாயைப் பார்த்ததாள் அஞ்சலை.

கிழவியின் வெற்றுக்கண்களுக்கு அந்தப் பார்வையின் பொருளைப் புரிந்துகொள்ளும் திராணி கிடையாது, என்பதைக் கண்டு கொண்ட 'குப்பிலாம்பு' பராமுகமாக உமிழ்ந்துகொண்டிருந்தது.

வெடவெடக்கும் கால்களில் சாம்பல் பொட்டலத்தை அழுத்தித் தேய்த்து, மேலிருந்து கீழாக உருவிக் கொடுத்தாள் கிழவி. பார்வை தான் வஞ்சகம்செய்து சலனங்களை மறைத்தாலும், யூகத்தில் உணர்ந்து கருமமாற்ற முடியாதபடி உடலினைப்போல் அனுபவமும் தளர்ந்து போய்விடுவதில்லையே! தள்ளாத வயதில் உடல் தளர்ந்து போனாலும் உள்ளம் தளர்ந்துவிடாமல் அனுபவ முத்திரையாக கனிந்துபோய் விடுகின்றது. ''என் பிள்ளைக்கு புரண்டு படுக்கக் கூட சத்து இல்லை... போட்டா போட்டபடியே என்ற நினைவு வரும் போது கிழவியின் கண்கள் பனிக்கின்றன. மூக்கை சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

பொறிபறக்கும் சாம்பல் பொட்டலத்தைக் கால்களில் ஒற்றி ஒற்றி எடுக்கும்போது நெஞ்சுப்பகுதி மீண்டும் குளிர ஒத்தடத்திற்கு அடங்கிப் போயிருந்த 'கர் புர்...' என்ற ஆஸ்துமா மூச்சிறைப்பு 'கிர்... கிர்...' என்ற இழுவையுடன் மீண்டும் தொண்டைக்குள் கட்டியம் கூறியது.

பனிக்காலம் தொடங்கிவிட்டால் அஞ்சலை பாயும் படுக்கையும்தான் ஆஸ்துமா வாட்டி எடுத்துவிடும் மூன்று பிள்ளைகளுக்குத் தாயான நோஞ்சான் உடம்பைப் பார்க்கவே பரிதாபமாகவே இருக்கும். பழைய தேயிலைக் கூடைக்கு சேலையைச் சுற்றியது போல எலும்புக் கூட்டைக் காட்டிக் கொண்டு கிடக்கும் போது, ''இந்தப் பாடு படுவதற்கு செத்தால் தேவலை'' என்று தோட்டமே அனுதாபப்படும்.

நோயில் படுத்தாளென்றால் கைகால்கள் நடுக்கமெடுத்து வளைந்து வழங்காமல் போய்விடும். பின்னர் தேறி எழுந்து நடமாடுவதற்குள் வீட்டிலுள்ள செப்புப்பாத்திரங்கள் கூட ரூபா அஞ்சி ரெண்டுக்கென்று அடகில் தவம் கிடக்கும்.

தாயம்மா கிழவியின் கணவன் தோட்டத்தில் தண்ணிக்காரனாக இருந்தான். இராமசாமி என்ற அவனது பெயர் மறைந்து போக எல்லோரும் 'தண்ணிக்காரர்' என்றே அழைப்பர். தோட்டத்தில் வாண்டு பட்டாளம் தண்ணிக்கார தாத்தா தண்ணிக்கார தாத்தா என்று மொய்த்துக் கொண்டிருக்கும்

காதில் கடுக்கன் மின்ன, தண்ணீர் வாளியுடன் தூரத்து மலைக்குள் புகுந்துவிட்டாரென்றால் குமரிகள் அவரைச் சுற்றிக்கொண்டு செய்யும் குறும்புகளுக்கோ அளவே இல்லை. உச்சிகொதிக்கும் வேளையில் ஒரு மிடறு வாங்கிக் குடித்தார்களென்றால் புதுத்தெம்புடன் மலையில் ஏறிவிடுவார்கள். 'அவர் இருக்கும்போதே நான் 'போயிடணும்'' என்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்த தாயம்மா கிழவியை ஏமாற்றிவிட்டு அவர் ஒரு நாள் திடீரெனப் போய்விட்டவுடன் கிழவி தன்மகள் அஞ்சலை வீட்டில் அடைக்கலமாகிவிட்டாள்.

அவ்வேளையில் அஞ்சலையின் மூன்றாவது பிள்ளையான பையன் வயிற்றில். முத்த பெண் நங்கத்திற்கு ஏழு வயது. இளையவன் அவளுக்கு ஒரு வயது இளமை. அஞ்சலையின் கணவன் சப்பையா தோட்டத்தில் தொழிற்சங்கக் கிளையின் தலைமைப் பதவியையும் ஏற்றுத் திறமையாக செயலாற்றி வந்தான்.

'ரவுன்' பிந்திவிட்டபடியினால், ஒருநாள் மாலை தோட்டத்தில் அந்தி கொழுந்தெடுப்பு நடந்து கொண்டிருந்தது. கொழுந்து முற்றிப்போய் சேதமடைந்துவிடக் கூடாது என்பதற்காக சகலரும் அசுரவேகத்தில் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். அது கொழுந்துக்காலம். காலையிலிருந்தே மழை தூறிக்கொண்டிருந்தபோதும் மழையினைப் பொருட்படுத்தாது 'றப்பர் சீட்', கம்பளி இன்னும் படிகுத் துண்டுகளில் புகுந்து கொண்டு வேலையில் கண்ணாக இருந்தனர்

காலையிலிருந்து சீராகப் பெய்து கொண்டிந்த மழை அந்தியில் ஒரேயடியாக அடம் பிடித்துக் கொண்டு கொட்டம் அடித்தது. எல்லோரும் பிந்திய 'ரவுணை' முடித்துவிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை புதுமலையில் நிற்கவேண்டுமென்ற ஆவலில் கவிழ்ந்துகொண்டுவரும் இருளையும் கவனத்தில் கொள்ளாது தளிர்களை வீழ்த்திக் கொண்டிருந்தனர். இருண்ட வானத்திலே அக்கினிப் பந்தொன்று திடீரென நெளிந்து உதிர்ந்தது. இடிமுழக்கம் செவிப்பறைகளை அறைந்து தாக்கியது. நடந்ததைப் புரிந்துகொள்வதற்கு முன்னர் நால்வர் கருகிக் கிடந்தனர்.

அவர்களில் சுப்பையாவும் ஒருவன். சுப்பையாஇருக்கும்வரை அஞ்சலைக்கு எவ்வித கஷ்டமுமே தெரியாமல் காலம் ஓடிக்கொண்டிருந்தது. இதற்குப்பின்னர் முழுக்குடும்பப் பொறுப்புமே அவள் தலையில் வந்து விழுந்தபோது கலங்கிப் போய்விட்டாள். நேரம் பார்த்து நோய்வேறுவந்து ஒட்டிக்கொண்டு நிரந்தரமாக இடம்பிடித்துக் கொண்டுவிட்டது. நோயாளி உடம்பு, உழைக்க முடியாத தாய் - விபரம் புரியாத மூன்று குழந்தைகள் குடும்பச்சுமை வாட்டி எடுத்துவிட்டது.

சுப்பையா உயிருடன் இருந்தபோது கொடுக்க வாங்கவென்றிருந்த 'சட்டிக்கடை அம்மா' அவ்வப்போது இரண்டொன்று என்று கொடுத்து உதவி செய்தாள். செயின், அட்டியல் என்று தொடங்கி மூக்குத்திவரை விற்று மூளியாக்கும்நிலைக்கு வந்துவிட்டது. குளிர்காலம் வந்துவிட்டால் ஆஸ்துமா அலைக்கழித்துவிடும். கூடவே கைகால்கள் நடுக்கமெடுத்து வளைந்து குறண்டி விளங்காமல் போய்.. பின்னர் ஒருவாறு தேறி எழுந்து..நடமாடுதற்குள் மாதங்கள் பல ஓடிவிடும்.

இந்த நிலையில்தான் மூத்தபெண் பெரிய டீமேக்கரின சிபார்சுகளுடன் கொழும்பில் ஒரு பங்களாவிற்கு பிள்ளை பார்ப்பதற்கென்று அனுப்பி வைத்தாள். "ஒரு வேலையுமே கிடையாது வேளாவேளைக்கு சாப்பிட்டுவிட்டு பிள்ளையோடு விளையாடிக் கொண்டிருந்தால் போதும்" என்ற வேண்டுகோளோடு அழைத்துச் செல்லப்பட்டவள் மூன்று மாதங்களின் பின்னர் பழுக்கக் காய்ச்சிய கம்பியால் குறி சுடப்பட்டு 'கள்ள முதேசி' என்ற பட்டத்துடன் தோட்டத்துக்கு திரும்பி வந்த அஞ்சலையை "இனிப் பிச்சை எடுத்தாலும் பிள்ளைகளை அனுப்புவதில்லை" என்ற முடிவினை எடுக்கவைத்துவிட்டது.

ஆளும் பேருமாக வேலை செய்பவர்களே 'ஐயோ, ஐயோ' என்று என்று பரிதவிக்கும்போது நிரந்தர நோயாளியான அஞ்சலை வயதான தாயையும் மூன்று பிள்ளைகளையும் வைத்து காலத்தை ஓட்டுவதே போதும் என்றாகிவிட்டது.

தாயம்மா கிழவி விதியை நொந்தபடியே மக்கள் பேரிலுள்ள கொந்தரப்பிற்கு தினமும் நடையைக் கட்டிவிடுவாள். கிழவி பென்சன் எடுப்பதற்கு முன்னர் பிள்ளை மடுவத்தில் பிள்ளைகளைப் பராமரிக்கும் வேலையைச் செய்துவந்தாள். அவள் கைப்பட்டு வளர்ந்தவர்கள் இன்று தோட்டத்தில் மட்டுமன்றி கொழும்பில் பெரிய சைவக்கடைகளிலும் தொழில் பார்த்துவருகிறார்கள்.

தீபாவளி, பொங்கல் என்று வரும் திருநாட்களில் விதம் விதமாக உடுத்திக் கொண்டு தோட்டத்தை வலம்வரும்போது 'ஏல பெரிய எளந்தாரியாகிட்டாக... மூக்க வடிச்சிக்கிட்டு சாக்கில கெடந்தத மறந்திட்டாக போல நான் தூக்கி.. தொடச்சி வளர்த்தவ' என்று இழுக்கும் போதே இளசுகள் 'இல்ல அம்மாயி உன்னைய பார்க்கத்தான் வந்தேன் என்று சங்கோஜத்துடன் இந்தா வெத்திலை வாங்கிப்போடு' என்று சில்லறையைக் கொடுத்துவிட்டுப் போவார்கள். கிழவி 'மகராசனா இரு' என்று வாழ்த்திவிட்டு சில்லறையை முந்தானையில் முடிந்து கொள்வாள்.

இரவு வெகு நேரம்வரை விழித்திருந்து மகளுக்கு பணிவிடை செய்த கிழவி காலையிலேயே எழுந்து தலைவர் முருகையா வீட்டை நோக்கி நடந்தாள்

தலைவர் முருகையா புறப்பட்டுக் கொண்டிருந்தார். 'அம்மாயி உங்க விடயமாகத்தான் இன்றைக்கு ஜில்லாவுக்குப் போகிறேன். இன்னைக்கு லேபர் ஒபீசில் கொன்புரன்சு நடக்குது. துரையும் வாராரு இந்தத் தடவை எப்படியும் ஒரு நல்ல முடிவு கிடைக்கும்.' இளைஞனான தலைவர் மிகவும் உறுதியுடன் கூறினார்

'எப்படியும் பேசி முடிவெடுத்துக் கொண்டு வாங்க அஞ்சலை இனி பொழைக்க மாட்டா போலிருக்கு பேத்தி தங்கத்தை பேர் பதிஞ்சிட்டீங்கன்னா எங்க குடும்பம் எப்படியோ பொழைச்சிக்கிடும்.'

'அம்மாயி.. நான் புதுசா பேரு பதியும்படி துரையை கேட்காத நாள் இல்லை..அவன் நாட்டானுக்கும் வேலை கொடுக்கனும்னு இழுத்தடிச்சிக்கிட்டே வாரான் இன்னைக்கு எப்படியும் முடிவு கெடைச்சிடும் நீங்க போங்க..நான் அந்திக்கு வாரேன்..' தலைவர் வேக்மாகப் புறப்பட்டுவிட்டார்

தலைவரை சந்தித்த கிழவி வழமைபோல் கொந்தரப்பிற்கு நடந்துவிட்டாள். வயிறு 'கடமுடா' என்று என்று உருட்டியது. வெறும் சாயத் தண்ணி உள்ளே போராடியது:

வயது வந்தவர்களையும் கைக்காசு ரேட்டில் 'பாசான் துடைக்க, உரம் போட' என்று சில்லறை வேலை செய்பவர்களையும் தோட்டத்துச் செக்ரோலில் பேர்பதிந்து பெரியாள் ரேட்டில் வேலைவழங்கவேண்டுமென்று தோட்டத்துத் தலைவரும் ஜில்லா பிரதிநிதியும் கேட்காத நாள் கிடையாது. வாரத்திற்கொரு மகஜர் மாதத்திற்கொரு 'கொன்புரன்சு' என்று முயன்று கொண்டிருந்தனர்.

மூன்று தலைமுறையாக தொழிலாளர்கள் பெருகிக்கொண்டிருக்கின்றனர் தோட்டம் அப்படியேதான் இருக்கின்றது. உழைத்துக் கொடுக்கும் தொழிலாளரைப் பற்றியோ, வஞ்சகம் செய்யாது தளிரை வாரிக்கொடுத்துக் கொண்டிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் குறிஞ்சி தென்னவனுக்கு மணிவிழா!

மலையகத்தில் மூத்த கவிஞரும் இன்றும் உயிர்த்துடிப்புடன் கவிதைகளை எழுதிக்கொண்டிருக்கும் கவிஞர் குறிஞ்சி தென்னவனுக்கு இந்த ஆண்டு மார்ச் மாதம் அறுபது வயதாகிறது. அறுபது வயதை எட்டிப் பிடிக்கும் கவிஞர் குறிஞ்சி தென்னவன் இன்னும் 'இருளில்' இருக்கிறார் என்பது அனைவரும் மிகவும் நன்றாக அறிந்த விடயம். இவரது மணிவிழாவை சிறப்பாக நடத்தி இவருக்கு நிதிசேர்த்து வழங்குவதென முடிவுசெய்து இதற்கென ஒரு மணிவிழாக் குழுவை அமைத்து செயல்படுத்த மலையக அமைப்புகள் சில முன்வந்துள்ளன. கவிஞர் குறிஞ்சி தென்னவனின் மணிவிழா ஏப்ரல் இறுதியில் நாவலப்பிட்டியில் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது மணிவிழா மலரும்வெளியிடப்படும். விழாமலரில் நிதிஅளித்தவர்களின் பெயர் பட்டியலும் இடம்பெறும்

குறிஞ்சி தென்னவன் மணிவிழா குழுவினர்:-தலைவர் திரு. அந்தனி ஜீவா, செயலாளர் திரு. அ. வைத்தியலிங்கம், பொருளாளர் திரு. கே. பொன்னுத்துரை, அமைப்பாளர் திருவாளர்கள் விஜயகுமார் செல்வம், சுப்பிரமணியம், (அதிபர் கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயம்)

குறிஞ்சி தென்னவனுக்கு நிதி உதவி செய்பவர்கள் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

கே. பொன்னுத்துரை
34, சொய்சாகலை,
நாவலப்பிட்டி

கும் மண்ணைப்பற்றியோ எவரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

புதிய மலை உண்டாக்குதல், கான்போட்டு சரிவுகளுக்கு கல்கட்டுதல் என்பவை எல்லாம் 'எஸ்டிமேட்டில்' தான். எப்போதாவது பேருக்கு ஆங்காங்கே இடம்பெறும். பேருக்கு ரோட்டோர மலைகளில் ஆங்காங்கே உரத்தைத் தூவிவிட்டு பெரும்பகுதி உரம் தோட்டத்திற்கு வராமலே துரை எல்லோரின் கண்களிலும் மண்ணைத் தூவிவிடுவார். இதுஒன்றும் ஒருவருக்கும் தெரியாத சிதம்பரச் சக்கரமல்ல...தெரிந்தும் என்ன பயன்? துரை செல்வாக்கு அப்படிப்பட்டது.

மாலையில் கொந்தரப்பிலிருந்து வீடு திரும்பும் போதே கிழவி பீலிக் கரையில் குளித்துவிட்டு, சேமன் கொழுந்து வெட்டிக்கொண்டு வந்தாள். இன்று அஞ்சலைக்கு ஆஸ்துமா அவ்வளவாக இல்லை. எனினும் எழுந்திருக்க முடியவில்லை.

மூத்தவள் தங்கமும், இளையவள் சந்திராவும் தோட்டத்திற்குப் பக்கத்திலிருக்கும் 'நாட்டிற்கு'ப் போய் நெல் அறுவடை செய்த பின் வயல் வெளியில் தவறிப் போய் கிடக்கும் நெற்கதிர்களை தேடி எடுத்துச்சேகரித்துக் கொண்டு வந்திருந்தார்கள்.

கடைக்குட்டி கோபால் நிர்வாணமாக முற்றத்துப்புழுதியில் வாண்டுகளோடு விளையாடிக்கொண்டிருந்தான். மூத்தவள் தங்கமும் சந்திராவும் தண்ணீர் கொண்டுவர, சமையல் ஆரம்பமாயிற்று

தங்கம் பதினான்கு வயதினைக் கடந்துவிட்ட போதிலும், வயதிற்கேற்ற வளர்ச்சி உடலில் காணப்படவில்லை. ஒட்டிய தேகம், உள்வாங்கிய கண்கள், பரட்டைத் தலை, பட்டினிக் கோலம்..பரிதாபக் காட்சிப்பொருளாக நின்றாள்

பூப்பெய்தும் வயதினை அடைந்துவிட்டவளா?..அப்படிஒரு பொலிவு ..லட்சுமிகரம்..தோற்றம் கிடையவே கிடையாது. இளையவளும் அப்படியே வளர்ச்சியின்றிக் குள்ளமாகக் காட்சியளித்தாள்.

கிழவி காட்டுச் சேமம்கீரைத் தண்டின் நாரை உரித்து அரிப்பு நீங்குவதற்காகப் புளிக்கரைசலில் அதனை ஊறவைத்துக்கொண்டிருந்தாள்.

''அம்மாயி... அம்மாயி..''

கிழவி எட்டிப்பார்த்தாள். தலைவர் நின்று கொண்டிருந்தார்.

''என்னப்பா போன காரியம் எப்படி? எப்ப கைக்காசு புள்ளை கல செக்குரோலில் பதியுறாங்களாம்''- கிழவியின் கேள்வியில் அவசரம், நம்பிக்கை, பசித்த வயிறு எதிர்காலம்! அத்தனையும் கொக்கிப் போட்டு கொளுவியிருந்தன.

பதில் கூறாது தலைவர் மௌனமாக நின்றார். ஒருவேளை தான் கூறப்போகும் செய்தியை கிழவி எப்படித் தாங்கிக்கொள்ளப் போகின்றாள் என்று நினைத்தாரோ.. என்னவோ?..

''என்னப்பா ஒன்னும் பேசாம நிற்கிறீங்க? இன்னைக்கும் ஒன்னும் முடிவாகலியா?.. கிழவியின் குரல் நடுங்கியது. தலைவர் தொண்டையைக் கனைத்துக்கொண்டு துக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலிடக் கூறினார்;' அம்மாயி கைக்காசு புள்ளைகளை பேர் பதியுறதா முடிவாகிறிச்சு.... ஆனா தலைவர் இழுத்தார்

'ஆனா என்னப்பா.. சுணங்குமா?..' கிழவி இடிந்து போய்விட்டாள்.

'அதெல்லாம் சுணக்கம் ஒன்னும் கிடையாது வயசுக்குவந்த புள்ளைகளைத்தான் அடுத்த முதலாம் திகதி பேர் பதியப் போறாங்களாம் இனிமேல் சில்லறை வேலை செய்யுற கைக்காசு பிள்ளைகளை நிறுத்தப் போறாங்களாம். வயசுக்கு வராத பிள்ளைகளுக்கு வேலை கொடுக்கிறது குத்தமுன்னு சட்டம் சொல்லுதாம்..அப்படின்னா அடுத்த முதல்தேதிக்கு உங்க பேத்தியை பேர் பதிய முடியாதுன்னு நினைக்கிறேன் என்ன செய்யுறது? உங்க நிலைமை எனக்குப் புரியுது. இதுக்காகத்தான் நான் விட்டுக் கொடுக்காம இவ்வளவு தூரம் போராடிப் பார்த்தேன்.''

தலைவர் எப்போது போனார் என்பது கூடக் கிழவிக்கு நினைவில்லை. பேரப்பிள்ளைக்குச் சாப்பாடு போட்டுக் கொடுத்துவிட்டுச் சிவனே என்று திண்ணையில் முடங்கிவிட்டாள். நித்திரை வரவில்லை.' எப்படி காலத்தை ஓட்டுவது?' மகன் இளித்தேறி எழும்புவது என்பது நடக்க முடியாத காரியம். கொந்தரப்பு சம்பளம் செலவுகளுக்கு செக்ரோலில் பிடிக்கப்பட்டது போக தோட்டத்திற்கு கடன். ஐந்து ஜீவன்கள் எப்படி வாழ்வது?

மூத்தவள் தங்கத்தைப் பேர் பதிந்துவிடலாம் என்ற நம்பிக்கையிலும் இடிவிழுந்துவிட்டது. அதுமட்டுமா? இனி கைக்காசு, சில்லறை வேலைகட்கும் எடுத்துக்கொள்ளமாட்டார்கள். இந்த சந்தர்ப்பத்தை விட்டால் இனி அடுத்த வருடம்தான்

என்ன செய்வது? இதற்குத்தானே தலைவர் வீட்டிற்கு காலையிலும் மாலையிலுமாக நடையா நடந்து திரிந்தாள்.

மறுநாள் கிழவி கொந்தரப்புக்குப் புல்வெட்டச் செல்லவில்லை. தனது இரு பேத்திகளையும் அழைத்துக் கொண்டு நாட்டுக்குப் போய், சூடு மிதித்து நெல்லை அள்ளித் தூற்றிச் சேகரித்த பின்னர் மண்ணோடு ஒதுக்கிப்போடப்பட்டிருக்கும் பதர் குவியலைப் புடைத்து தேறிய நெல்லை பழந்துணியில் பொட்டலமாகக் கட்டிக்கொண்டு வந்தாள்

நாட்டிலிருந்து வீடு திரும்பும் போது சூரியன் மேற்கு நோக்கிப் பயணமாகிவிட்டான். கிழவி பேத்திமார்களுக்குப் பல கதைகளையும் புத்திமதிகளையும் அடுக்கிக் கொண்டே வந்தாள்

கிழவி மனதில் திட்டமொன்று உருவாகிக் கனத்தது. எப்படியும் அடுத்த முதலாம் திகதி தங்கத்தின் பெயரைப் பதிந்துவிட வேண்டும் என்பதைத் திடப்படுத்திக் கொண்டாள்.

தனது திட்டத்தை நினைக்கும் போது ஒருபுறம் பயமாகவும் கவலையாகவும் பாவமாகவும் இருந்தது எனினும்—

சரியா பிழையா என்பதை யோசிக்க மறந்துவிட்டாள்... வேறுவழி ...வாழ வேண்டுமே..!

மாலை மயங்கத் தொடங்கியது. கொண்டுவந்த நெல்லை உரலில் போட்டுக் குற்றிக்கொண்டிருந்த மூத்தவள் தங்கத்திடம், ஏதோ கூறிய கிழவி, அவளை அழைத்துக் கொண்டுபோய்க் கதவு மூலையில் அமர்த்திவிட்டுப் படுக்கையில் கிடக்கும் மகளிடம் ஏதோ காதோடு காதாக கூறினாள். அவள் படுத்தபடியே விசித்து விசித்துக் கண்ணீர் சிந்தினாள்

சிறுமி தங்கத்திற்கு ஒன்றும் விளங்கவில்லை. 'அம்மாயி நான் எழுந்து வாரேன் என்று நடமாட முற்பட்டாள். அவளை ஏறி மீண்டும் கதவுமூலையில் உட்கார வைத்துவிட்டாள், கிழவி. கிழவியின் கண்டிப்பான குணத்தை தங்கம் அறிவாள். அதற்குப்பின்னர் அவள் எழுந்திருக்கவில்லை.

இளையள் சந்திரா அம்மாயின் கட்டளைப்படி ஓட்டமும் நடையுமாக பீலிக்கரைக்குப் போய் வீட்டிலுள்ள பாத்திரங்களில் நீரை நிரப்பிக் கொண்டிருந்தாள்.

மாலை மயங்கிவிட்டது. திண்ணையில் அமர்ந்த கிழவி ஒரு பாட்டம் பெரிதாகக் குரல் எடுத்து தன் மருமகளை நினைத்து அழுதாள். பின்னர் மேட்டுலயத்துச் சின்னான் டோபியிடம்போய் ரெண்டு மாத்து வாங்கிக்கொண்டு வீடுகளுக்கு சேதி சொல்லிவிடும்படி கூறிவிட்டு வந்தாள்

பக்கத்து வீட்டுக்காரர்கள் குசு...குசுவென விசாரித்துவிட்டுச் சிரித்தபடியே போனார்கள். தொங்க வீட்டு முனியம்மா, 'என்ன அடுத்த வீட்டு தீட்டுவீட்டுக்குப் போகலியா?' என்று ஆறு மணிக்கே கேட்க 'போகாம இருக்க முடியுமா? அடுத்த வீடு ஏழு மணிக்குத்தானாமே? தண்ணி ஊத்தற நேரத்துக்குப் போவோம்' என்று கூறிக்கொண்டு தன் கொண்டை முடியைத் தேட அஞ்சலையின் காம்பரா வாசலில் கங்காணியார் வீட்டுப்பெற்றோல் மாக்ஸ் காஸ்லைட் புஸ்..என்று இரைந்துகொண்டு வெள்ளி ஒளியைப் பரப்ப, அந்த ஒளியை வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த சிறுவர்களைப் பெரியவர் தூரம் போகும்படி துரத்த, 'தீட்டு வீடு' களை கட்டிவிட்டது.

ஏழு பத்தாச்சு. இனி நல்லநேரம். தண்ணி ஊத்தலாம் என்று கூறியபடியே வந்தாள், பக்கத்து வீட்டு அலமேலு. அவள் வீட்டு ரேடியோ அலறிக் கொண்டிருந்தது.

கிழவி பேத்தியை வாசலுக்கு அழைத்து வந்தாள். வண்ணான் கொண்டுவந்த சேலையை வட்டமாகப் பிடித்தனர் பெண்கள். அலமேலு 'கொளவி கொட்டுங்க.. கொளவி போடுங்க...' என்றாள். இரண்டு பெண்கள் வாயில் விரலை விட்டுக் குரலை எழுப்பினர். கங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சலை செல்கிறாள்

புசல்லாவ இஸ்மாலிஹா

அஞ்சலை செல்கிறாள்
அதிதூரம் ஓமானுக்கு
பஞ்சம் தீர்ப்பதற்குப்
பாவமவள் துணிந்திட்டாள்

இத்தனைநாள் இலைக்கிள்ளி
உடம்பெல்லாம் தேய்வடைய
சொத்தான மலையகத்தில்
சுகமின்றி இருந்தவள்தான்

மேட்டுலயம் பள்ளலயம்
முற்றல்இலை மட்டக்கொழுந்து
காட்டுவாகை கரிச்சான்குஞ்சு
கண்டிருப்பாள் கேட்டிருப்பாள்

நகர்ப்புறமும் சில நாட்கள்
நகைவாங்க துணிவாங்க
பகட்டாகப் படம் பார்க்கப்
பலநாட்கள் சென்றிருப்பாள்

என்றாலும் பஸ்போட்டை
பார்த்துச்சொல்ல அறியாதாள்
தன்நாவில் சிங்களமோ
சிக்கித்தானும் கூறாமல்

எந்நாளும் உலகமதில்
உள்ளதொன்றும் அறியாது
தன்னாலே சிருஷ்டித்த
தனியுலகில் வாழ்ந்திருந்தாள்

எட்டவுள்ள சவுக்குமலை
இவள் மாமன் ஊரதனால்
சிற்றாடை வயதிலவள்
சென்றுவந்த நினைவுண்டு

மூக்கமலை, மல்லிகைப்பூ
நல்லதண்ணி ஊரெல்லாம்
பார்க்கவேண்டும் என்றுமட்டும்
பலநாட்கள் கூறிடுவாள்

கையெழுத்தை அறியாது
கைநாட்டு வைக்குமவள்
மெய்யாக ஓமானுக்கு
பணிப்பெண்ணாய்ப்
போகின்றாள்

மலைநாட்டுப் பெண்களெலாம்
மக்களென்று கூறுபவர்
தலைநிமிர்ந்து செல்லுமிவள்
தைரியத்தை என்னென்பீர்

பட்டணத்தைப் பார்த்தறியா
பாவையெலாம் பாஸ்போட்
டால்
எட்டசென்று தொழில்பார்க்கும்
இனிமையைத்தான் என்னென்
பீர்

அடிமையென்ற முத்திரையால்
இங்கல்ல அங்கும் சென்று
விடிவின்றி கிடக்குஞ் செயல்
எண்ணினால் துயர்தானே

புசல்லாவை சேர்ந்த இஸ்மாலிஹா இன்று மலையகத்தில் எழுத்துத் துறையில் ஈடுபட்டுள்ள முன்னணி பெண் எழுத்தாளர். இவரது கவிதைகள் 'விழிப்பு' என்ற தொகுதியிலும் பிபிதெனபொய என்ற தொகுதிலும் இடம் பெறறுள்ளன, இவர் ஆசிரியராகப் பணிபுரிகிறார்

காணி சம்சாரம் பாக்கியம் சம்பிரதாய பூர்வமாக சிறுமி தலையில் முதலில் தண்ணீரை ஊற்றினாள். சிறுமி ஒன்றும் அறியாது குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தாள். பிறகு ஒருவர் மாறி ஒருவராக செம்பில் தண்ணீரை மொண்டு மொண்டு ஊற்றினர்.

கிழவி சிறுமிக்குப் பக்கத்தில் நின்று கையடக்கமாக எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டாள். அநாயசியமாக எவருக்கும் இடம் கொடுக்கவில்லை. அவர்களும் கிழவிக்குத் தெரியாததா என்று அவள் பொறுப்பிலேயே விட்டுவிட்டனர்.

எப்படியோ எல்லாம் நல்லபடியாக கிழவி திட்டமிட்டபடியே முடிந்துவிட்டது. கிழவி பேத்தியை குச்சுக்குள் அமர்த்திவிட்டு குசு..குசு.. என்று ஏதோ கூறினாள். அதில் கண்டிப்பு இழையோடிக் கொண்டிருந்தது. பேத்தியும் விளங்கியதோ இல்லையோ தலையை ஆட்டி ஆமோதித்துவிட்டு அமர்ந்துவிட்டாள். அம்மாயி கண்டிப்பானவள் மட்டுமல்ல, எல்லாம் தங்கள் நன்மைக்கே புரிபவள் என்பதும் தங்கத்திற்கு தெரியும்.

குச்சுக்குள் இருந்த பேத்தியை கிழவி இயன்ற மட்டும் கவனித்து உடலைத் தேற்றிக் கொண்டிருந்தாள். இதற்கிடையில் தலைவரை சந்திக்கவும் தவறவில்லை. கிழவிவின் பேத்தி வயதுக்கு வந்துவிட்டதையிட்டு தலைவருக்கும் மகிழ்ச்சி, புதிதாக பேர்பதியும்போது முதலாவதாக பதிவதாக உறுதியளித்துவிட்டார்.

பதினைந்து நாட்கள் பறந்தோடிவிட்டன. இன்று முதல் தேதி பொழுது புலர்ந்ததோ புலரவில்லையோ என்பதை நிச்சயிக்க முடியவில்லை. கிழக்கு வெளுத்துக் கொள்ள நினைக்கின்றது. இன்னமும் அடிவானம் சிவக்கவில்லை. இருள் மெல்ல நகர்ந்து ஓடமுயலுகின்றது. இது இரவா..? இல்லை காலையா..? என்று அறியமுடியாத பருவமாக விளங்க, ஸ்டோருக்கு மேல் இருக்கும் பிரட்டுக்களம் நிரம்பி வழிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பட்டியகாமத்தில் ஒரு பாவலன்

தொழிலாளர் துயர்பாடும் தோழன்

கண்டி மாநகருக்கு அருகில் தெல்தொட்டை அதன் கூப்பிடு தூரத்தில் பட்டியகாமம் என்ற தேயிலைத் தோட்டம்... அந்தத் தோட்டத்து லயன் காம்பிராக்களின் ஒன்றிலிருந்து பாடல் கேட்கிறது...கம்பீரமான இனிய குரலில் பாடல் ஒலிக்கிறது

'இந்தியாவிலிருந்து வந்த சேதி கேளுங்கோ
—முன்
இறந்துபோன பாட்டன் படகில் வந்தார்
பாருங்கோ
இலங்கைதனக்கர் ஈனுழையாக் காடுதானுங்கோ
—பாட்டன்
இருதயத்தை கலங்கவிடாதமி த்திட்டா
ருங்கோ

—★—

காலை மணி ஐந்துக் கெல்லாம் தப்படிப்
பாங்கோ
கணக்கு போல ஆறுக்கெல்லாம் பெரட்டெ
டுப்பாங்கோ
வேலையிலே ஏழுக்கெல்லாம் இல்லா வி ட்
டாங்கோ
வேலையில்லை என்று சொல்லி விரட்டிடு
வாங்ககோ

இப்படி கணீரென்ற குரலில் பாடுபவர்' வேறு யாருமல்ல பட்டியகாமம்தந்த பாவலன் எம். ப. வேல்சாமிதாசன். எழுபதை எட்டிவிட்ட தோற்றம் ஆனாலும் அவரின் கம்பீரக்குரல் அவரை நமக்குஇனங்காட்டுகிறது. அவரின் இனிமை மிகுந்த பாடலைக் கேட்கும் ஆவலில் இன்னொரு பாடலை பாடச் சொல்கிறோம்: தான் எழுதி வெளியிட்ட 'இலங்கை தொழிலாளர் இம்சைக்குரல்' என்ற பாட்டுப் புத்தகத்திலிருந்து சில வரிகளைப் பாடுகிறார்

ஆலவட்டம் போட்டுக்கொண்டு
வேலைவெட்டி செய்யாமலே
அழகுநடை வேண்டாமப்பா மக்களே-உங்கள்
அடிவயிறு சுருங்கிப் போகும் மக்களே

என்று பாடுகிறார்.

பட்டியகாமம் தந்த பாவலன் வேல்சாமிதாசன் தானே இயற்றிய பாடல்களை பிரசுரமாக அச்சிட்டு தோட்டம் தோட்டமாக சென்று பாடி வருகிறார். கடந்த அரை நூற்றாண்டாக இதனை தன் வாழ்வாக்கவும் தொழிலாகவும் கொண்டிருக்கிறார். இவரைப் போன்றவர்களைப் பாராட்டி கௌரவிக்க வேண்டியது நமது கடமையாகும்

வழமையாக வேலைக்குச் செல்வோருடன் புதிதாகப் பெயர் பதிய வந்திருக்கும் குமரிகளும் வரிசையில் நிற்கின்றனர் அந்தக்கூட்டத்தின் மத்தியில் பதினான்கு வயதினைக் கடந்துவிட்ட போதிலும் வளர்ச்சியோ, மலர்ச்சியோ இன்றி வாடிப்போன தங்கம்; அம்மாயிக்கு தலையாட்டிவிட்டு வந்ததை மறந்துவிடாமல்; அஞ்சலையின் பழைய சேலையொன்றைச் சுற்றிக் கொண்டு குமரிகளோடு தன் பெயரையும் பதிவுசெய்துவிட்டு, கொழுந்துக்கு கூடையுடன் மலைக்குச் செல்வதற்கு தயாராக நின்று கொண்டாள்.

தங்கத்தின்பெரிய மனுஷி வேடத்துடன் தாயம்மா கிழவியின் பசி போக்கும் நாடகம் அரங்கேறி கொண்டிருக்க....

பனி கொட்டிக்கொண்டிருந்தது.

பருவம் தவறாமல் கொட்டும் பனியும், காலைக் குளிரும் மந்த போசனத்தால் வாடிப்போன தங்கத்தின் உடலில் அப்படி என்ன தான் மாற்றத்தைச் செய்துவிடப் போகின்றன?...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகப் பெண்களும் தலைமைத்துவமும்

எமது நாட்டில் ஆங்கிலேயருக்கு எதிராக மக்கள் செயற்பட்ட காலம் தொட்டு ஆங்கிலேயருக்கு எதிர்ப்பு இயக்கமாக உருவாகிய காலத்திலிருந்து தொழிற்சங்க போராட்டங்களை முன்னெடுத்த காலங்களிலும் இந்நாட்டின் பெரும்பான்மை சமூக மக்கள் மத்தியில் இருந்து வந்த பெண்களும் பங்கெடுத்துள்ளார்கள். இக் காலகட்டத்திலேயே மலையக மக்களின் வருகையும் இருந்துள்ளது. இம்மக்கள் இங்கு வந்து தோட்டங்கள் என்ற சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தமையாலும் சுதேசிகள் தமது எதிராளிகளின் கையாட்களாக இவர்களை க்ருதியமையாலும் மலையக மக்களுக்கும் சுதேசிகளுக்கும் இடையில் ஓர் இணைப்பு நீண்டகாலமாக ஏற்படவில்லை.

(இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட நகர்புற இந்திய தொழிலாளர்கள் மத்தியிலும்—வர்த்தகர்கள் மத்தியிலும் கங்காணிமார் மத்தியிலும் சங்கங்கள் ஏற்பட்டபோதிலும் தோட்ட தொழிற்துறையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் மத்தியில் நடேச ஐயரால் ஆரம்பிக்கப்பட்ட அகில இலங்கை தோட்டத்தொழிலாளர் சம்மேளனமே முதன் முதல் அமைப்பாக செயற்படத் தொடங்கியது.) தோட்டத்துறையில் தொழிலாளர்களின் நிலையை ஐயர் நன்கு அறிந்திருந்தவராகவும் அதற்காக குரல் எழுப்பியவராகவும் இருந்தார். அவர் தொழிலாளர்களின் பிரச்சனையோடு தம்மை மட்டுப்படுத்திக்கொள்ளாமல் (பெண்களின் விடுதலையிலும் அக்கறையாக இருந்தார் என்பதை டொனமூர் ஆணைக்குழு இலங்கைக்கு சர்வஜன வாக்குரிமையை அறிமுகப்படுத்தியபோது பெண்களுக்கு வாக்குரிமை கொடுப்பதை சேர் பொன். இராமநாதன் எதிர்த்தபோது நடேச ஐயர் "பெண்களுக்கு வாக்குரிமை வேண்டாம் என்று கூறும் எனது நண்பர்கள் சிலர் தங்களுக்கு கிடைத்த சீதன பணத்தால் இங்கு வந்திருக்கிறார்கள் பெண்களுக்கு வாக்குரிமை கொடுத்தால் தேர்தலில் மனைவியரும் நிற்பர் என்று நினைத்து அவர்கள் தயங்குகிறார்கள்" எனக்கூறிய வாசகங்கள் வெளிப்படுத்துகின்றன. ஐயர் ஆண் பெண் சமத்துவதிற்காக வாதாடியவராக இருந்தபோதிலும் அக்கால கட்டத்தில் மலையக சமூகம் முகம் கொடுத்த துன்பங்களை கண்டு ஐயர் பொதுவாக மலையக் சமூகத்தின் நலன் என்று செயற்படக்கூடியதாக இருந்தமையினாலும் அக்கால கட்டத்தில் உலகெங்கிலும் பெண்நிலைவாதம் என்ற க்ருத்து ஒரு சரியான உருவகம் எடுக்காத காலம் என்பதாலும் அவரது தொழிற்சங்கம் தொழிலாளர் உரிமை என்று செயற்படக்கூடியதாக இருந்ததே தவிர பெண் உரிமை தொடர்பாக செயற்படக்கூடியதாக இருக்கவில்லை, மலையக தொழிலாளர்களின் பாரிய மாற்றத்தற்கும் எழுச்சிக்கும் நடேசஐயர் வித்திட்டவராயினும் அவரது தொழிற்சங்க சம்மேளனத்தில் எந்தளவு பெண்ணிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. முடிவெடுக்கும் ஸ்தானங்களில் எத்தனை பெண்கள் இருந்தார்கள்? என்பதற்கு ஆதாரங்கள் இல்லை.)

செல்வி மேனகா

நடேச ஐயரின் மனைவியான மீனாட்சி அம்மையார் அவரது தொழிற்சங்க சம்மேளனத்தில் மக்களை அணிதிரட்டும், அறிவுமயப்படுத்தும் ஒரு தளபதியாக விளங்கியிருக்கிறார். ஐயரது மனைவியாருக்கு, இன்றைய தலைவர்களின் மனைவியாருக்கு தலைவர்களின் செயலாளர் பதவியை மனைவி என்ற காரணத்திற்தாக கொடுப்பதுபோல வழங்கப்படவில்லை. ஐயரது மனைவியார் ஐயரின் அளவிற்கு இந்திய வம்சாவழி தொழிலாள மலையக் மக்களை அணிதிரட்டுவதிலும் உணர்வு மயப்படுத்துவதிலும் அக்கறையாக இருந்திருக்கிறார். மலையக சமூகத்தின் பிரச்சனைகளை தெரிந்தவராகவும் அவர்களை தட்டி எழுப்புபவராகவும் இருந்திருக்கிறார் என்பதற்கு அவரது பாடல்கள் சான்றாக அமைகின்றன

பாய்க் க்ப்பல் ஏறியேவந்தோம்—அந்நாள்
பலபேர்கள் உயிரினை யிடைவழி தந்தோம்
தாய் நாடென்றெண்ணி யிருந்தோம்—இவர்கள்
தகாத செய்கையைக் கண்டு மனமிகநொந்தோம்.

புலிகள்தான் வாழ்ந்திட்டகாடு—அது இப்போ
பொழில் சூழும் அழகிய சிங்கார நாடு,
புவியிதற் கிந்தியராடு—களைப்போல
பல்லாயிரம் பேர்கள் உயிரிதற்கீடு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சா தெதிர்த்துமே நின்று—நமக்கிங்கே
அதிக சுதந்திரம் தரவேண்டுமென்று
நெஞ்சி லுரத்துடன் நின்று—போராடிட
நேயரே வருகுவீர் திடத்துடனின்று.

மீனாட்சி அம்மையாரின் பாடல்கள் ஒவ்வொன்றையும் உற்று நோக்கும்போது அந்த கால கட்டத்தை பிரதிபலிப்பதாகவும் அந்த கால கட்டத்தில் முழு மொத்த மலையக சமூகமும் முகம் கொடுத்த பிரச்சனைகளையும் அறிந்திருக்கிறார் என்பதை வெளிகாட்டுகிறது. மலையக சமூகத்திற்கெதிரே சாடுவதையும் அவரது பாடல்கள் மூலம் வெளிகாட்டி உள்ளனர். ஐயர் எவ்வாறு செயற்பட்டாரோ அந்த அளவிற்கு இவரும் மலையக சமூகம் என்றளவிலேயே சிந்தித்திருக்கிறார். அவருடைய பங்களிப்பு மலையக சமூகத்திற்கு பாரியதாக இருப்பினும் பெண்களிற்காக தனித்துவமாக குரல் எழுப்பாமைக்கு இரண்டு காரணங்கள் இருந்திருக்கின்றன.

(1) மலையக சமூகம் முகம் கொடுத்த பிரச்சனைகளும் துன்பங்களும்

(2) உலகெங்கும் பெண்ணிலைவாதம் என்ற கருத்து உருவகம் எடுக்கலாம்.

இன்றைய காலகட்டம் போல் பெண்நிலைவாதம் ஒரு உருவகம் எடுத்திருத்தல் நிச்சயமாக அவர் மலையக பெண்களை அணிதிரட்டுவதில் முக்கிய பெண் விடுதலை தளபதியாக திகழ்ந்திருப்பார் என்பதற்கு அவருடைய சமூக உணர்வு சான்றாகும்.

(1947ல் ஐயருடைய மரணத்தோடு அவர் தொழிற்சங்க சம்மேளனமும் வீழ்ச்சியுற்று அன்றைய இலங்கை இந்திய காங்கிரசான இன்றைய இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், லங்கா சமசமாஜ கட்சியின் தொழிற்சங்கம் போன்றன மலைய தொழிலாளர் மத்தியில் இடம் பிடிக்கத் தொடங்கின.) ஐயரின் மரணத்திற்கு பின் அவரது தொழிற்சங்கம் வீழ்ச்சியுற்றதற்கு காரணம் அவர் தன்னைப்போன்ற தளபதிகளை உருவாக்கத்தவறியதன் விளைவாகவே இருக்க முடியும்.

(இலங்கை இந்திய காங்கிரஸ் ஒரு இந்திய உணர்வோடு நகர்வாழ் இந்தியர்களையும் கங்காணிமார்மார்களையும் கொண்ட ஸ்தாபனமாகவே ஆரம்பிக்கப்பட்டு தேவையின் நிமித்தம் தொழிலாளர்கள் மத்தியில் பிரவேசித்தது ஆரம்பகாலகட்டத்தில் சமூக உணர்வோடு பலர் இருந்தபோதிலும் அது காலகட்டத்தில் ஓர் வர்க்கநலன் பேணும் ஸ்தாபனமாக மாற்றம் எடுத்து விட்டது. இவ் ஸ்தாபனத்தில் பல பெண்கள் முன்னணி பாத்திரம் வகித்திருந்தாலும் மலையகப் பெண்களின் பிரச்சனைகளையோ ஏனைய பெண்களின் பிரச்சனைகளையோ அறிந்தவர்களாக இருக்கவில்லை.)

(இவர்கள் தமிழ் சம்பிரதாயங்களையும் தமிழ் சம்பிரதாயத்தில் உள்ள ஆண் ஆதிக்க நிலையையும் அவ்வாறே பேணி பாதுகாத்தவர்களாகவும் இருந்தார்கள். 60களின் முற்பகுதிகளில் உலகெங்கிலும் பெண்கள் எழுச்சியின் 2வது காலகட்டமாக விளங்கிய காலத்தில் இலங்கை தொழிலாள காங்கிரஸிற்குள்ளும் கண்டியை சேர்ந்த திருமதி சிவபாக்கியம் குமாரவேல் மலையகப் பெண்களுக்காக எவருமே சிந்திருக்காத அளவில் 6 மணித்தியால வேலை, மலையகப் பெண்களுக்கான அமைப்பு, அதன் சர்வதேச தொடர்பு என்பன தொடர்பாகவும் குரல் எழுப்பி உள்ளார். அவர்கள் போன்றவர்களை தலைமை ஸ்தானத்திற்கு கொண்டு வரவோ அவர்களின் குரல்களை ஓங்கி ஒலிப்பதற்கோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. இதற்கான காரணம் தலைமைகள் மக்களில் இருந்து விலகி அந்நியப்பட்டவர்களாகவும் பெண் விடுதலை தொடர்பாக அக்கறை அற்றும் இருந்தமையே.)

(அடுத்ததாக இதை தொடர்ந்து மலையகத்திலே உருவான தம்மை முற்போக்குவாதிகள் என்பதை பறை சாற்றும் தொழிற்சங்கமோ அல்லது ஏனைய தொழிற்சங்கமோ தங்களின் 50%க்கு மேலான பெண்களை அங்கத்தவர்களாக கொண்டிருந்தபோதிலும் எந்த ஒரு பெண்ணையும் அறிமுகப் படுத்தி தலைமை ஸ்தானத்திற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படவில்லை. காரணம் இத்தொழிற்சங்கங்களின் மாதர் சங்கங்களையோ அல்லது பெண்கள் அணியையோ தலைமையை அலங்கரித்தவர்கள் தலைவர்களின் மனைவிகளாகவோ வைப்பாட்டிகளாகவோ இருந்தமையும் இவர்களுக்கு மலையக பெண்கள் தொடர்பாகவோ அவர்களின் பிரச்சனை தொடர்பாகவோ எந்த அறிவும் அற்றவர்களாக இருந்தமையுமே காரணம். போராட்ட உணர்வோடு பெரும்பான்மை மக்கள் மத்தியில் பல பேர்களை உருவாக்கிய லங்கா சமசமாஜக் கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்த தொழிற் சங்கங்கள்கூட இவ்விடயத்தில் அக்கறை கொண்டிருந்ததாக இருக்கவில்லை என்பதை இன்றைய மலையக் பெண்கள் மத்தியில் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலாவது பெண் விடுதலைவாதிகளோ தலைமை வகிக்கக் கூடியவர்களா இல்லாமல் இருப்பது வெளிக்காட்டுகிறது.)

மலையக சமூகத்தின் மத்தியில் பல்வேறு முற்போக்கு பிற்போக்கு தொழிற்சங்கங்கள் 50%ற்கு அதிகமான அங்கத்தினர்களாக பெண்களை கொண்டிருந்த எந்தவொரு தொழிற்சங்கமும் ஒரு பெண் பிரதிநிதியை உருவாக்கவில்லை என்றால் அதற்கு காரணம் ஆண் ஆதிக்கத்தின் வெளிப்பாடும் பரந்த நோக்கின்மையுமே காரணமாகும். தாமாகவே அவ்வப்போது ஆங்காங்கே ஆர்வத்துடன் செயற்பட வந்த பெண்களும் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட நிலையும் விமர்சனத்திட்குட்பட்ட நிலையும் அறியக் கூடியதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மலையக பெண் தொழிலாளர்களும் ஏதோ ஒரு தொழிற்சங்கத்திற்கு சந்தா கட்டிக் கொண்டு வருகிறார்கள். ஆனால் தொழிற்சங்கமென்றால் என்ன? அது தங்களுக்கு என்ன செய்ய வேண்டும்? என்பது பற்றி ஒன்றுமே இப்பெண்களுக்குத் தெரியாது. இவர்களை அந்த இடத்திற்கு கொண்டு வர தொழிற்சங்கங்களும் முயற்சி எடுக்க வில்லை. இதற்கு காரணம் தொழிற் சங்கங்கள் பெண்ணிலைவாதம் பற்றி தெளிவான சிந்தனை அற்றிருப்பதா? அல்லது மலையகப் பெண்களை அவ்விடத்திற்கு கொண்டு வந்தால் அவர்கள் தங்களிடமே எதையும் தட்டிகேட்டுவிடுவார்கள், என்ற பயமா?

அடுத்ததாக 73களின் பிற்பகுதிகளில் மலையக சமூகத்தில் மத்தியில் பிரவேசித்த அரச சார்பற்ற சமூக சேவை நிறுவனங்கள் தொழிற் சங்கங்களை குறைகூறிக்கொண்டு பிரவேசித்தன.

இவர்கள் மத்தியிலும் தனியான பெண்கள் அமைப்புக்களும் பெண்கள் அணிகளும் செயற்பட்டன, இங்கும்கூட அநேகமாக இப்பெண்கள் அமைப்புகளில் தலைமை அங்கத்தவர்களாக ஸ்தாபனத்தின் முக்கிய பதவி வகிப்பவர்களின் மனைவியர் அல்லது துதிபாடிகள் போன்றோரே இருப்பர். அல்லது இந்திய சமூகத்தில் இருந்து அந்நியப்பட்டவர்களாக இருப்பர். இவர்களிடம் பெண்நிலைவாதம் தொடர்பாக எந்தவிதமான சித்தாந்த ரீதியான அறிவும் இல்லாமையினால் தாங்கள் எந்த பெண்களை அணிதிரட்டி அறிவுமயப்படுத்தமுற்படுகிறார்களோ அவர்கள் எஜமானி வேலைக்காரி போன்ற மனோபாவத்தில் நடத்திச் செல்வர். சில சமூக சேவை நிறுவனங்கள் பெண்நிலைவாதம் தொடர்பாக ஓரளவு தெளிவான சிந்தனை உடையோரை தங்களோடு சேர்த்துக் கொள்ள விரும்பமாட்டார்கள். அண்மைக் காலத்தில் பெண் அபிவிருத்தியில் அக்கரை கொண்டு பல மேலை நாடுகள் நிதி உதவி வழங்க முன்வந்தன. இந்நிதி உதவியை பெறும் நோக்கில் அனேக சமூக சேவை நிறுவனங்கள் பெண்கள் அணியை உருவாக்குகின்றார்கள். இருப்பினும் இப்பெண்கள் அணிக்கு பெண்ணிலை சம்பந்தமாக அறிவுமயப்படுத்த தவறிவிடுவது எவராவது ஒரு சிலர் இவ்மைப்புகளில் உள்ள பெண்களை அறிவுமயப்படுத்த வந்தாலும் அதை பெரிதும் விரும்பமாட்டார்கள். ஏன் எனில் இவர்கள் வாயளவில் பெண்ணடிமை கதைத்தாலும் உண்மையில் ஆண் ஆதிக்க வாதிகளே.

ஒரு ஸ்தாபனம் பெண்கள் விடயத்தில் அக்கறை கொண்டுள்ளது என்பதை அவ் ஸ்தாபனத்தில் உள்ள பெண்களின் எண்ணிக்கை அல்ல தீர்மானிப்பது. அவ் அமைப்பில் எத்தனை பெண்கள் முடிவு எடுக்கும் ஸ்தானத்தில் இருக்கிறார்கள். அவர்கள் எந்தளவு பெண்கள் விடயத்தில் தெளிவாக இருக்கிறார்கள் என்பதே தீர்மானிக்கும் அப்படியானால் எம்மத்தியில் இயங்கும் அமைப்புக்களின் நிலை என்ன என்பது சொல்லாமலே புரியும்.

கடந்த காலத்தில் இந்நாட்டில் அரசியலில் மலையகப் பெண்களின் பங்கு குறிப்பிட்டு கூறமுடியாத நிலையில், மலையகப் பெண்களின் அரசியல் பங்களிப்பு என்பது பூச்சிய நிலையிலே இருந்திருக்கும். இருப்பினும் இன்று எமது சமூகம் பிரசவித்திருக்கும் புதியதொரு மத்தியதர வர்க்கத்தின் புதிய சிந்தனையாளர்களின் உருவாக்கமும் மலையக சமூகத்தை புதியதொரு பாதையில் இட்டுச் செல்ல அவர்கள் அரசியல், பிரவேசத்தில் அடியெடுத்து வைத்துள்ளனர்.

எதிர் காலத்தில் ஓர் அரசியல் ரீதியான அறிவு மயப்படுத்தலே எமது மக்களை சரியான இடத்திற்கு இட்டுச் செல்லும் என்பதாலும் பெண்விடுதலையை பொருத்தமட்டில் ஒரு காத்திரமான பங்களிப்பை செய்யக் கூடியவர்கள் மலையகப் பெண்களே என்பதாலும் இவர்களை திட்டவட்டமான தெளிவான அரசியல் கல்விக்கூடாக அரசியல் பிரவேசிக்கச் செய்தல் அவசியம்.

பெண் விடுதலை தொடர்பாக உண்மையில் அக்கறையுடன் செயற்படும் அமைப்புகளாயின் பின் வரும் கோரிக்கையின் அடிப்படையில் மலையகப் பெண்களை அணிதிரட்டி நகர்த்தவேண்டும்.

(1) பெண் தொழிலாளர்களுக்கு 6 மணிநேர வேலை
(2) மலையக தொழிலாள பெண்களுக்கு மாதச் சம்பளமும் கவச உடை (சீர் உடை)யும் வழங்கப்பட வேண்டும்.
3) பெண்களுக்கு இரவு நேர வேலை நிறுத்தப்பட வேண்டும்.
(4) சர்வதேசப் பெண்கள் தினம் சம்பளத்துடன் கூடிய தேசிய விடுமுறை தினமாக பிரகடனப் படுத்தப்பட வேண்டும்.
(5) தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள், அரச சார்பற்ற சமூக நிறுவனங்களில் முடிவெடுக்கும் ஸ்தானங்களில் பெண்களுக்கு சமபங்கு.
(6) மலையகப் பெண் தொழிலாளர்களுக்கு பெண் கண்காணிப்பாளர்கள்.
(7) பூரணத்துவமான குழந்தை காப்பகங்கள் உருவாக்கிடுதல்.
8) பெண்களின் அரைநிர்வாண விளம்பரங்களை தவிர்த்தல்.
(9) உயர் பதவிகளில் பெண்களுக்கு சமபங்கு.
(10) பிள்ளைகளை வேலையாட்களாக வைப்பது தவிர்த்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துத்துறையில் பெண்கள்

திருமதி பத்மா சோமகாந்தன்

இலக்கியம் மனிதனுடைய உணர்வுகளை, அபிலாஷைகளை, ஆசாபாசங்களை, எண்ணங்களை சிந்தனை ஓட்டங்களை வெளிப்படுத்துவதினால் சமுதாயத்தில் அங்கமாகிய தனிமனித வாழ்வையும், சமுதாய அமைப்பினையும் சமூக, ஒழுக்க நெறிகளையும் வாசகர்கள் அறிந்து உணர்ந்து வாழ்க்கையைச் செப்பனிட துணை புரிகின்றது. இதனால் மனித மேம்பாட்டுக்கு, சிந்தனை ஊட்டத்திற்கு இலக்கிய வெளிப்பாடுகள் இன்றியமையாதவையாகின்றன.

சமூகத்தின் சரிபாதியாக விளங்குவது பெண்ணினம். ஆணுக்கு உள்ள அறிவும் ஆற்றலும் பெண்ணுக்கும் இயல்பாகவே அமைந்துள்ளன.

இவ்வேளையிலே அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்த் தாத்தா உ. வே. சுவாமிநாத ஐயரவர்கள் கூறிய கருத்தொன்றை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

"ஆடவர், மகளிர் ஆகிய இருவர்களுக்கும் அறிவு பொதுவாகும். இப்பொழுது நமக்குக் கிடைப்பனவும் ஆயிரத்தி எண்ணூறு வருடங்களுக்கு முன் இயற்றப்பட்டனவாகிய புறநானூறு முதலிய தமிழ் நூல்களில் சங்க காலத்தில் பல பெண்கள் தற்புலமை வாய்ந்தவர்களாக இருந்தனர் என்பது தெரியவரும். ஏறக்குறைய 50 பெண்பாலார் இயற்றிய செய்யுள்கள் இப்பொழுது கிடைக்கின்றன. மற்ற புலவர்களுடைய வாக்குக்கு எவ்வளவு சிறப்பு உண்டு. அவ்வளவு சிறப்பு இவர்களுடைய செய்யுள்களுக்கும் உண்டு" என மகாவித்வான் உ. வே. சுவாமிநாத ஐயரவர்கள் குறிப்பிட்டார்.

ஔவையார், வெள்ளி வீதியார், காக்கைபாடினியார், கள்ளூர்தன் முல்லையார், கழார்கீரன் எய்ட்டியார், கச்சிப்பேட்டு தன்னாகையார், ஒக்கூடர் மாசாத்தியார், மாரோக்கத்து தம்பசனையார், பொன்முடியார், வெண்பூதியார் பூங்கண்உத்திரையார் முதலிய பல பெண் புலவர்கள் சங்க காலத்திலிருந்தே எழுத்துத்துறையில் சிறந்த புலவர்களாக விளங்கியுள்ளனர்.

சங்க காலத்தை அடுத்த பக்தி இலக்கிய காலத்தில் பெரும் புலவராகத் திகழ்ந்தவர் காரைக்கால் அம்மையார், அறிவு அடிப்படையிலான சமய வாதமும் கடவுள் மீதான பக்தியும் இவருடய பாடல்களில் பரக்கக் காணலாம். ஆண்டாள் மற்றொரு பக்தி இலக்கிய கர்த்தா. இறைவனாகிய கண்ணன் மீது காதல் கொண்டு அவர் எழுதிய பாசுரங்கள் மிகச் சிறப்புவாய்ந்தவை. இப்பெண் புலவர்களுடைய படைப்புகள் இன்றும் காலத்தைக் கடந்து நிலைத்து நிற்பது குறிப்பிடத்தக்க்ன,

இடைக்காலத்தில் பெண்களுடைய அறிவும் ஆற்றலும் பின்தள்ளப்பட்டு அவள் அடுப்பங்கரைக்கு உரியவள் என்ற சுமைக்கு ஆளாக்கப்பட்டாள். அறிவு பெறுவதற்கு அவளுக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. உலகம் முழுவதும் அடித்த பெண் அடிமைஅலை அவளை ஒளிக்கு வரமுடியாமல் இருட்டுக்குள்ளேயே அமர்த்திவிட்டது.

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிலைமை மாற்றமடைந்தது. இதனை அக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களும் பிரதிபலித்தன. "பெண்களுடைய கல்வியினால் புருஷனுடைய கல்வியும் அதிகரிக்கும் என்பது பிரகாசமாயிருக்கிறது" என்ற வேதநாயகம் பிள்ளையின் பெண்கல்வி பற்றிய கூற்றினை இதற்கு உதாரணமாக்க் குறிப்பிடலாம்.

"பட்டங்கள் ஆள்வதும்
சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த
வந்தோம்
எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே
பெண்
இளைப்பில்லை" என்ற புரட்சிக் கவிஞர் பாரதியாருடைய பெண் விடுதலைப் பாடல்களும் பேரெழுச்சியை ஏற்படுத்தின.

பெண்ணைப்பற்றி சமூகம் கொண்டிருந்த பிற்போக்கான கருத்துக்கள் முற்று முழுதாக சமுதாயத்திலிருந்து விலகாதபோதிலும் சமையல் கட்டே கதியென்று கிடந்திருந்த பெண் சற்று முன்னேறி கூடத்திற்கு வந்து வெளிவாயிலைத் தாண்டி வீதியிலும் பாதம் பதித்திட படிப்படியாக் வழி வந்தது,

சிருஷ்டி இலக்கியம் என்பது நான்கு சுவர்களுக்குள் மட்டும் உருவாகிவிடும் வெறும் கற்பனைச் சரக்கல்ல. அனுபவம், கேள்வி அறிவு, உணர்வு முதலியவைதான் சிருஷ்டி இலக்கியத்திற்கு ஆதாரமாய் அமைந்தவை. இலக்கியத்தில் ஈடுபாடுள்ள ஒரு பெண், தனது அல்லது தான் வாழும் குடும்ப சமூக சூழவின் ஆசாபாசங்களை அனுப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்களை, இன்னல்களை, எண்ண ஓட்டங்களைத்தான் சிறப்பாகச் சித்தரிப்பதில் வெற்றியடையலாம். சங்க காலப் பெண்புலவர்களின் படைப்புகளிலும் இது பிரதிபலிப்பதைக் காணலாம்.

(லக்ஷ்மி, அனுத்தமா, குகப்பிரியை சூடாமணி முதலிய நாவலாசிரியர்களின் கதைகள் குடும்பப்பாங்கானவை எனக் குறிப்பிடுவதன் காரணம், பெண் என்பவள் குடும்பத்தின் பிரதான அங்கமாகத் திகழ்பவளாக இருப்பதாலும் குடும்பத்தைச் சுற்றியே அவர்களின் அனுபவம் அமைந்திருப்பதாலே யாகும் எனலாம்.)

அரை நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழ்ப் பெண்ணினத்தைப் பலவிதமான துன்பங்களும் சிரமங்களும் மலமாகச் சூழ்ந்திருந்தன. உயர் கல்வி, உத்தியோகம் என்பவற்றிற்கு வாய்ப்பில்லை. வரதட்சணைக் கொடுமை அவளை நெரித்தது. பால்ய விவாகம் பாதாள குழியில் வீழ்த்தியது. ஆணாதிக்கம் அடக்குமுறை புரிந்தது. இவற்றிலிருந்து விடுபட வைத்து சமூகத்தை விழிப்புறச் செய்வதில் இலக்கியம் பங்களிப்புச் செய்தது. வாளைவிடப் பேனா வலிமை மிக்கதல்லவா?

(ராஜம் கிருஷ்ணன், ஜோதிர்லதா கிரிஜா, அம்பை, செண்பகம், ஊர்வசி முதலியோருடைய நாவல்கள் சிறுகதைகள் பெண்களின் பெருமூச்சை எதிரொலித்து விடிவுக்கு வழிகாட்டும் வலிமை பெற்றவையாக விளங்குகின்றன.)

"புகையிலை விரித்தால் போச்சு பெண் சிரித்தால் போச்சு" என்றொரு நாட்டுப் புறமொழி நமது இலங்கை நாட்டிலும் உண்டு. தமிழ்ப் பெண்ணுக்குள்ள நிலைமையை இது இரத்தினச் சுருக்கமாக விளக்குகிறது. சில தசாப்தங்களுக்கு முன்னர் ஆடல், பாடல், இலக்கியம், மேடைப்பேச்சு, உத்தியோகம் முதலிய துறைகளில் ஈடுபடுவது இழிந்ததென்ற நிலை இங்கும் இருந்தது. கோவில்களில் சதுர்க்கச்சேரி புரிகின்ற 'சின்னமேளம்' என பட்டம்

ஐம்பதுகளில் எழுத்துத்துறையில் காலடி எடுத்து வைத்த மூத்த தலைமுறையைச் சேர்ந்த பத்மா சோமகாந்தன் கண்டி மாநகரில் இந்து சிரேஷ்ட பாடசாலையில் தான் ஆசிரியப் பணியைத் தொடங்கினார். 'புதுமைப்பிரியை' என்ற புனைபெயரில் எழுதிய இவர், (அகில இலங்கை ரீதி 'சுதந்திரன்' நடத்திய சிறுகதைப்போட்டியில் 'இரத்த பாசம்' என்ற சிறுகதை மூலம் முதல் பரிசுபெற்ற முதல் பெண்மணியாவார்.) அறுபதுகளில் அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் மகாநாட்டில் இலங்கை பிரதிநிதியாக பங்கு பற்றி சிறுகதை மன்னன் புதுமைப்பித்தனின் துணைவியார் கமலா விருத்தாசலத்தை நேரில் சந்தித்து உரையாடியுள்ளார். (இவரின் 'கடவுளின் பூக்கள்' என்ற சிறுகதைத் தொகுதி அச்சில் உள்ளது.

சூட்டி எள்ளி நகையாடி அவளைக் கவர்ச்சிச் சின்னமாக இழிவுபடுத்தி விடும் நிலை இருந்தது. அதனால் இலக்கியத் துறையில் ஈடுபாடுள்ள பெண்கள் இலைமறை காயாகவே இருந்தனர். (ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டிருந்த பெண்கள்தான் ஆரம்பத்தில் சில கட்டுரைகள், கவிதைகளை எழுதினர். அதுவும் தினப் பத்திரிகைகளின் வார இதழ்களின் மாதர் பகுதியில் மட்டும் இவ்வாறான படைப்புகள் வெளியாகின.) இவ்வாறான சூழ்நிலையில் ('மாதர் தம்மை இழிவு செய்யும்' மடமையைக் கொளுத்துவோம்'' எனச் சூளுரைத்துக்கொண்டு மங்கையர் உயர்வுக்காக சஞ்சிகை ஒன்றினை சில இதழ்களையேனும் எமது நாட்டில் நடத்துவதற்கு முன்வந்த மங்களம்மாள் என்பவரை நாம் மறந்துவிடலாகாது.) நமது நாட்டில் சிறுகதை நாவல் முதலிய நவீன இலக்கியத்துறைகளில் பெண் எழுத்தாளர்கள் 1950களில் தான் தோன்ற முடிந்தது. கோகிலம் சுப்பையா, சசிதேவி தியாகராஜா பத்மா சோமகாந்தன், வள்ளி நாயகி இராமலிங்கம், பவானி ஆழ்வாப்பிள்ளை, சாந்தினி தம்பிராஜா, முதலியோரை இவ்வரிசையில் குறிப்பிடலாம். இவர்களைத் தொடர்ந்து, பா. பாலேஸ்வரி அன்னலட்சுமி இராஜதுரை, நயீமா சித்தீக், யோகா பாலசந்திரன், இராஜேஸ்வரி சுப்பிரமணியம், கோகிலா மகேந்திரன் முதலியோர் நவீன இலக்கியத் துறையின் இரண்டாவது தலைமுறையினராக தோன்றினர்.

சென்ற இரு தசாப்தங்களில் பெண் எழுத்தாளர்களில் தோன்றிய கமலினி செல்வராசன், தாமரைச்செல்வி தமிழ்ப்ரியா அருள்ராணி, புசல்லாவ இஸ்மாலிகா, சாந்தி தியாகராஜா முதலியோர் குறிப்பிடக்கூடியவர்களாவர்.)

(தமிழ் நாட்டில் உள்ளது போன்ற சீதனக்கொடுமை, பால்ய விவாகம் முதலியவை எமது நாட்டில் குறிப்பிடும் அளவுக்கு இல்லை.) அது தவிர தமிழ் நாட்டிலும் பார்க்க இலங்கையிலும் கல்வி அறிவு வளர்ச்சி அதிகமாகவும் உள்ளது. இவ்வாறான சமூக விழிப்பின் காரணமாக பெண்களுக்கு உயர் கல்வி, உத்தியோக வாய்ப்புகள் பெருகியுள்ளன; உலக அறிவு வளர்ச்சியின் பரம்பல் இளைஞர்களைப் போன்றே இன்றைய இலைகைத் தமிழ் இனம் பெண்களிடமும் வளர்ந்துள்ளது. அதனால் கணிசமான தொகையினரிடம் இலக்கிய ஈடுபாட்டையும் விழிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வினை வெல்லும் பெண்மை

குறிஞ்சி தேன்னவன்

பொட்டுத் துலங்கிடும் நெற்றியி லேயிளம்
பிறையென நீறணிந்து, — முழு
வட்ட நிலவு முகத்தில் கிறீமுடன்
வாசனைப் பவுடரிட்டு, — இடை
கட்டிய சேலையின் மேலொரு ரெட்டு
கட்டி நடந்திடுவாள்! — இவள்
எட்டி நடக்கையில் ரெட்டு உரசியே
இசை யெழுப்பிடுமே!

கூடை அசையகால் கூட்டி நடக்கையில்
கூத்தின் இயல் பிறக்கும், — விழி
சாடையும் மார்பினை மூடிய ஆடையும்
சாற்றும் அபிநயங்கள், — கொடித்
தோடைச் சுளையெனும் செவ்விதழில் இன்பச்
சிந்து பிறந்து வரும், — நடம்
ஆடும் கலாப மயிலென வேபொன்னி
அசைந்து வருகையிலே!

மச்சான் வரும்வழி பார்த்திரு கண்களை
மலர வைத்திருப்பாள், — தினம்
அச்சாரம் பெறும் இதழை மலர்த்தியோர்
அழகினை சிந்திடுவாள்!
பச்சைக் கிளியிவள் இச்சைக் கிசைந்தவன்
பக்கம் இருந்திடும் நாள், — எண்ணி
வெட்கத்தில் இவள்முகம் செக்கர் படிந்திடும்
வேளை நினைந்திடுவாள்!

கூதற்பனியில் குளிரும் உடலினில்
கூடும் நினைவுகளோ, — சங்
கீதம் இசைத்தே கிளரும் உணர்வினில்
கோதை குளிர்காய்வாள்!

ஆவணி வருவதை ஆவலி லேதினம்
அறிந்திட 'நாட்காட்டி'
தாள்களைப் புரட்டித் தவிப்பது போல்பசுந்
தளிர்களைக் கிள்ளிடு வாள்!

மேலெழும் காதல் உணர்வினை நெஞ்சவ்
மறைந்திடு பெண்மையைப்போல், — கூடை
மேல்வரும் கொழுந்தினை ஆழ அழுத்தியே
மேலும் கொழுந்தாய்வாள்!
ஆலையில் ஒலித்திடும் சங்கின் ஒலியிவள்
அத்தான் அழைப்பதுபோல், — இரு
நீள செவிகளில் விழுந்திடும் அக்கணம்
நெஞ்சம் மயங்கிடுவாள்!

அன்னையிடம்தன் எண்ணத்தை சொல்லியே
அனுமதி கேட்பதுபோல், — அன்று
பெண்ணிவள் கொய்த தளிர்களின் நிறையின்
பெறுமதி காணநிற்பாள்!
மங்கள நாணினை தன்கழுத் தேற்று
மகிழ்ந்திடும் பொழுதேபோல், — உளம்
பொங்கிடும் மகிழ்ச்சி முகத்தில் படரும், பேர்
போட்டு வருகையிலே!

எழுத்துத்துறையும் மலையகப் பெண்களும்

பொதுசனத் தொடர்பு துறையான பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றில் தங்களின் திறமையை வெளிப்படுத்துவதில் மலையகப் பெண்கள் அக்கறைகாட்டுவதில்லை என்ற குறைபாடு நீண்ட காலமாகவே நிலவிவருகிறது. எழுத்துத்துறையில் மலையகப் பெண்களின் ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்வதற்காக தோட்டப்பிரதேச கூட்டுச் செயலகத்தின் மூலமாக 'குன்றின் குரல்' ஒரு பயிற்சி கருத்தரங்கை நடத்த எண்ணியுள்ளது. அந்த பயிற்சி கருத்தரங்கில் பங்குபற்ற விரும்பும் மலையகப் பெண்கள் எழுத்துப் பயிற்சி அரங்கு, குன்றின்குரல், 30, புஸ்பதான மாவத்தை. கண்டி என்றமுகவரிக்கு தொடர்பு கொள்ளவும்

புணர்வையும் காணக்கூடியதாயுள்ளது. இலக்கியத்துறையில் புதிதாக ஈடுபாட்டுள்ள பெண் எழுத்தாளர்களின் சிந்தனையிலும் எழுத்து ஆளுமையிலும் புதிய வீச்சையும் வேகத்தையும் காணக்கூடியதாயுள்ளது.

(எனது ஓராயிரம் சிறகுகளை
விரிக்கவும்
விண்ணிற் பறக்கவும்ஏங்கினேன்
வானின் நட்சத்திரங்களையும்
சூரியனையும்
தொட்டுப் பார்க்க அவாவிற்று
என் ஆத்மா
பூமியின் பரப்புக்கு அப்பால்,
அண்டவெளியில் ஸ்பேஸ்
ஒடிசியின் விண்கலம்போல
எல்லையின்றிச் சுழலவும்
எண்ணினேன்
ஆனால்,
காலிற் பிணைத்த இரும்புக்
குண்டுகள்
அம்மியும், பானையும், தாலியும்
வேலியும்
என்னை,
நிலத்திலும் நிலத்தின் கீழே
பாதாள இருட்டிலும் அழுத்தும்,

இது புதிய தலைமுறையைச் சேர்ந்த பெண் கவிஞர் ஒருவரின் குரல்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக மாதர் இயக்க முன்னோடி

திருமதி சிவபாக்கியம் குமாரவேல்

ஸி.வி. வேலுப்பிள்ளை

நீரரித்த பள்ளங்களையும் ஏகாந்தமான ஒடுக்கங்களையும் கொண்ட மலைநாட்டிலே எப்பக்கம் நோக்கினும் கண்முன் உருண்டோடும் வளமிக்க தேயிலைத் தோட்டங்களின் பரந்த காட்சியிலே மூன்றரை இலட்சம் பெண்களின் வாழ்க்கை அடங்கி யுள்ளது. அன்றாட வாழ்க்கையில் தேயிலைச் செடிகளால் மறைக்கப்பட்டு, என்றென்றும் கொழுந்து பறிப்பதில் ஈடுபட்டிருக்கும் அப்பெண்கள் துரிதமாக முன்னேறிவரும் உலகுடன் தொடர்பற்றவர்களாக இருந்து வருகின்றனர். எனினும் கொழுந்து பறித்துப் பறித்துத் தேய்ந்துபோயிருக்கும் அவர்களுடைய மெல்லிய கைகள் நாட்டின் பொருளாதார வாழ்க்கை என்னும் வஸ்திரத்தை நெய்து வருகின்றன.

பாடுபட்ட வேதனையினால் கைகால்கள் சோர்ந்துபோயும் உடல் நலிவுற்றுமிருக்கும் அப்பெண்கள் அதிகாலையிலேயே எழுந்து, இருட்டும் வரை வேலை செய்வதற்காகத் தோட்டங்களுக்கு விரைந்து செல்கிறார்கள். இல்லத்துக்குத் திரும்பியதும் தங்களுடைய வீட்டு வேலைகளைக் கவனிப்பதுடன் குழந்தைகளை பராமரித்து தங்கள் கணவன்மாருக்குப் பணிவிடைகளும் செய்கிறார்கள். இரவில் வெகு நேரம் கழித்து உறங்கச் செல்லும் அவர்கள் மீண்டும் விடியற்காலையில் ''டாம் டாம்'' அடித்ததும் வேலைக்குப் போக எழுந்து விடுகிறார்கள்.

அவர்களுக்கு இளமையின் மனோகரம், தோன்றியவன்றேயழியும் மலரைப்போலக் குறுகிய காலமே நீடிக்கிறது; உரிய காலத்துக்கு முன்பே மறைந்துவிடுகிறது. மற்றும் மனிதப் பிறவிகள் அனுபவிக்கும் வசதிகளை அறவே பெறாதவர்களாக வாழ்க்கையின் சுகபோகங்களிலிருந்து ஒதுக்கித் தள்ளப்பட்டவர்களாக அவர்கள் காலம் தள்ளுகின்றனர். பாரதியார் முப்பத்தெட்டு வருடங்

களுக்கு முன்பு பிஜித் தீவுகளிலுள்ள கரும்புத் தோட்டங்களில் வேலை செய்த பெண்களின் வாழ்க்கையைப் பற்றிக் கூறியதெல்லாம் இந்தத் துர்பாக்கியப் பெண்களின் விஷயத்தில் இன்று உண்மையாயுள்ளது. இப்பெண்கள் அனுபவிக்கும் தடைகள் அநேகம்; அவர்கள் இனித்தான் எழுதப் படிக்கக் கற்று, தங்கள் ஆடவர்களுக்குச் சமமாக முன்னேற வேண்டும். ஆதலால், இத்தகைய பெண்ணினம் தலைமைதாங்கும் பேராற்றல்வாய்ந்த ஒரு பெண்ணைத் தோற்றுவிக்குமென்று எதிர்பார்ப்பது மூடத் துணிவாகும்.

திருமதி சிவபாக்கியம் குமாரவேல் ஒரு விதத்தில் இந்தப் பெண்களை, பிரதிபலிக்கும் சின்னமாகவும் அவர்களுடைய பிரதிநிதியாகவும் விளங்குகிறார். அவர் பாட்டாளிப் பெண்களில் ஒருவராயில்லாதிருந்தபோதிலும், பாட்டாளிகளுடன் நெருங்கிய தொடர்புள்ள குலத்தில் உதித்தவர் அவர் கலஹாவைச் சேர்ந்த பிரபல காங்கிரஸ்காரரான திரு. என். எம். பழனிச்சாமியின் புதல்வியாவர். அனேக ஆண்பிள்ளைகளையும் பெண்பிள்ளைகளையும் கொண்ட பெரிய குடும்பத்திலே பிறந்த அவர் பல இன்னல்கள், இடுக்கண்கள், துன்பங்கள், துயரங்களின் மத்தியில் வளர்ந்தார். கல்வி கற்கச் சந்தர்ப்பம் அற்றிருந்த அவருக்கு அறிவைப் பெறுவதற்குரிய வசதிகளும் வரையறுக்கப்பட்டிருந்தன. எனினும், இளம் வயதிலேயே சமூகபிவிருத்திப் பணியை மேற்கொண்டார். இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்திலே வீர கர்ச்சனை புரிந்த மாதர் திலகங்களைப் பற்றி அவர் படித்தறிந்த சொற்பதகவல்கள் அவருடைய கற்பனா சக்திக்கு உத்வேகம் அளித்தன. தெய்வத் தூண்டுதல் பெற்ற உற்சாகத்துடன் தமது பணியிலே முழு மூச்சாக ஈடுபட்டார். தம்மைச் சுற்றியிருந்த காரிருளைக் கிழித்துக் கொண்டு, ஒரு சிறிய அகல் விளக்கைப்போல வெளியேறிய அவர் தோட்டப் பெண்களின் முகங்களில் ஒளியை வீசினார். தங்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதிகளை யெதிர்த்து மௌனமாக ஆட்சேபனை தெரிவிக்குமுகமாக முன்னணிக்கு வருமாறு அவர்களுக்குத் தைரியமூட்டினார்.

காங்கிரஸ் இயக்கம் ஆரம்பமான காலமுதல் அவருடைய குரல் பத்திரிகைகளில் கேட்டது. காங்கிரஸ் மேடையிலிருந்து, தோட்டங்களி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுள்ள பெண்கள் நடத்தப்படும் விதத்தைக் குறித்து அவர் முறையிடுவார். தோட்டப் பெண்களை அன்புடனும் ஆதரவோடும் அனுதாபத்துடனும் நடத்தும்படி ஆடவர்களுக்கும் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கும் தமது பிரசங்கங்களை அவர் வாசிப்பார், ஆடவர்கள் தமக்குத் தாமே புன்முறுவல் செய்ய, பெண்கள் ஆச்சரியத்துடனும் மௌனமாகவும் அவருடைய பிரசங்கங்களுக்குச் செவி சாய்ப்பார்கள்.)

காங்கிரஸின் ஆண்டு மகாநாடு கூடும் தினம்தான் அவருடைய மகத்தான நாளாயிருக்கும். இளம் பெண்களையெல்லாம் திரட்டி அவர்களுக்கு வெள்ளைச் சேலையும் ஜாக்கெட்டும் அணிவித்து ஊர்வலத்தில் ஆடவர்களுக்கு முன்னால் அவர்களை அணிவகுத்துக் கொண்டு போய் நிறுத்துவார். அப்பெண்கள் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு கைகால்களைக் கஷ்டத்துடன் அசைத்துக்கொண்டு அவருடன் நடந்து செல்லும் போது, ஆடவர்கள் அதைப் பார்த்துச் சிரித்த வண்ணம் ''பட்டாளத்தைப் பாரு'' என்று கூறுவார்கள். திருமதி சிவபாக்கியம் தம்முடன் வந்த பெண்களில் சிலருக்கு மேடையில் ஆசனங்களைப் பெற்றுக் கொடுத்தபின் பாடுவதற்கு ஒலிபெருக்கியின் முன் செல்வதற்காக ஒரு சில அடி தள்ளிக்கொண்டு முன்னே செல்வார். அவருடைய இனத்தின் சார்பில் அவரது குரல் மட்டுமே ஒலிக்கும்.

காலக்கிரமத்தில், காங்கிரஸின் மாதர் மகாநாடு நடைபெறத்தொடங்கியதற்கு அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளே பெரிதும் காரணமாகும். எனினும் அதிலும் ஆண்களின் ஆதிக்கம் நடைபெறுவதே வழக்கமாயிருந்தது. ஆனால் திருமதி சிவபாக்கியம் தமது சொந்தப் பேச்சாளர்களையும் பாடகிகளையும் கொண்டு அதை முற்றிலும் மாதரின் நிகழ்ச்சியாகவே உருவாக்கினார். இச்சந்தர்ப்பங்களிலெல்லாம் அவர் மாதர்களின் பிரச்சினைகளை அலசி ஆராயும் சிறிய சஞ்சிகையொன்றையும் வெளியிட்டார்.

திருமதி சிவபாக்கியம் குமாரவேல் பிரச்சினைகளை அணுகும் முறை எப்பொழுதும் அனுதாபத்தை எழுப்பியது. உடல் வலிமையற்றிருந்த அவரிடம் குறைகள் காணப்பட்டனவெனினும், புறக்கணிப்பட்ட தமது சகோதரிகளின் நலனை வளர்ப்பதற்காக அவர் அந்தரங்க சுத்தியுடன் செய்த சேவை சிந்தனா சக்தி படைத்த எல்லோரையும் கவர்ந்தது. அவருடைய பணிகளில் அவருக்குப் போதிய ஊக்கம் அளிக்கப்பட்டதாகச் சொல்லமுடியாது. இந்த இயக்கத்திலே அவர் பதின்மூன்று வருடங்கள் சேவை செய்தாரெனினும், இயக்கத்திலிருந்த ஆண்கள் அவரை அவ்வளவாகக் கவனிக்கவில்லை. இன்றும்கூட பெண்கள் தங்கள் சொந்தத் தலைவர்களைக் கொண்டிருப்பது முட்டாள்தனம் என்றும் தங்களுக்குத் தலைமதாங்க அவர்கள் ஆண்களையே எதிர்ப்பார்க்க வேண்டுமென்றும் அனுபவசாலிகள் காணுகின்றனர்.

(திருமதி சிவபாக்கியம் தமது நற்பணிகளைத் தொடர்ந்து செய்து வரப்போதிய பணவசதி படைத்திராததால் விலகிக்கொண்டார்) அவர் செய்த பணி சாதாரணமாகத் தோன்றலாம். ஆனால் எளிமையும் விசுவாசமும் அந்தரங்க சுத்தியும் பொருந்திய அந்த ஊழியத்திலிருந்தே தோட்டப் பெண்கள் புதிய விழிப்பைப் பெற்றனர். திருமதி சிவபாக்கியம் பேராற்றல் வாய்ந்த ஒரு பெருந் தலைவராயில்லாதிருக்கலாம் ஆனால் தோட்ட மாதர் இயக்கத்தில் முன்மாதிரியான சேவைசெய்ததால் தோட்ட மாதர் இயக்கத்தை வளர்த்து விட்டதோட்ட மாதர் இயக்கத்தில் முன்னோடியாக்த் திகழ்ந்த மூத்த சகோதரியாக அவர் என்றென்றும் ஞாபகத்தில் வைக்கப்படுவாரென்பதில் சந்தேகமில்லை.)

(தினகரன் வாரமலர் 15-2-59)

ஒடுக்கப்பட்ட மக்கள் ஓரணி திரண்டதேன்?

"இன்று மலையகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் ஓரணியாக திரண்டுள்ளார்கள் என்பதை பத்திரிகை மூலம் அறிய முடிகிறது. இதற்கு என்ன காரணம் என்றால் மலையக மக்களுக்காக உழைத்த தலைவர்கள் மறைக்கப்படுகிறார்கள், மறக்கடிக்கப்படுகிறார்கள் இதனால் கோபங்கொண்ட மக்கள் ஓரணியில் திகழ்கிறார்கள். நடேசய்யர் சி. வி. வேலுபிள்ளை போன்றவர்கள் மலையக மக்களின் முன்னேற்றத்திற்காக பெறும் பங்களிப்பைச் செய்தார்கள். மலையக இலக்கிய வளர்ச்சிக்கு சி. வி. ஆற்றிய பணி அளப்பரியது. இவர்களுக்கு எல்லாம் வரலாற்றில் உன்னத இடம் அளிக்கப்படவேண்டும்.

இவ்வாறு இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும், மலையக கலை இலக்கியப் பேரவையும் 23-2-92 ஞாயிறு கொழும்பில் நடத்திய மக்கள் கவிமணி சி. வி. வேலுப்பிள்ளை நினைவுப் பேருரைக்கு தலைமை வகித்த நிதி திட்டமிடல் அமைச்சின் பிரதிப்பணிப்பாளர் திரு. எம். வாமதேவன் குறிப்பிட்டார். நினைவுப் பேருரையை சட்டத்தரணி எல். ஜோதிகுமார் நிகழ்த்தினார். அவர் பேசும் பொழுது ''அண்மையில் வெளிவந்துள்ள 90களில் பெருந்தோட்டத் துறை என்ற சஞ்சிகை ஓர் ஆய்வுக்கட்டுரையில் 40களில் அரசியலுக்கு வந்த ஒரு தலைவரைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு முன் மலையகத்தில் மக்களுக்காக உழைத்தவர்களைப்பற்றி குறிப்பிடப்படவில்லை. இது ஒரு வரலாற்று இருட்டடிப்பாகும். சி. வி. போன்ற தலைவர்களின் வரலாறு சிறப்பாக எழுதப்பட வேண்டும்'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்சினிமாவில் பெண்கள் சிறப்பானமுறையில் சித்தரிக்கப்படுவதில்லை

இன்று தமிழ்சினிமாவும் வீடியோ படங்களும் மலையகத்து மக்களின் அன்றாட வாழ்வில் ஊடுருவிவிட்டது. தமிழ்சினிமாப் படங்களில் பெண்கள் எவ்வளவு கீழ்த்தரமாக சித்தரிக்கப்படுகிறார்கள் இதைப்பற்றி பெண் எழுத்தாளரான திலகவதி பெண்கள் கருத்தரங்கில் படித்த கட்டுரை

தமிழ் சினிமாவில் பெண்கள் சரியானவிதத்தில் சித்தரிக்கப்படுவதில்லை என்பதே என் கருத்து பெண்கள் சுய சிந்தனை அற்றவர்களாகவும், ஆண்களைச் சார்ந்தே வாழ்பவர்களாகவும், தாமே தம் வாழ்க்கையைத் தேர்ந்து கொள்ளவும் அல்லது அமைத்துக்கொள்ளவும் தகுதி இல்லாதவர்களாகவே சித்தரிக்கப்பட்டு வருகிறார்கள்.

பெண்கள் நம்பப்படக்கூடாதவர்கள் பெண்ணை நம்பியவர்கள் கடைசியில் துந்தனா பாட்டுப்பாடித் தெருவில் நிற்பார்கள் என்பது போல ஒரு கருத்தும் பெண் ஒரு தெய்வம், தாய்மையின் சின்னம், அவள் வணங்கப்பட வேண்டியவள் என்பதாக ஒரு கருத்தும் சமூகத்தில் நிலவ இந்தச் சினிமா வழிசெய்கிறது

ஏதோ ஒரு காரணம்பற்றி ஒருத்திக்கு வாழ்க்கை கௌரவமாக அமையாமல் போய்விடுகிறது அவளை நேசித்த ஒருவன் அவளைத் தன் வாழ்க்கைத் துணையாக ஏற்க முன் வருகிறான் சமூகத்தின் அழுக்குகள் நிறைந்த கோர நகங்களின் கிழிசல்களுக்கு ஆட்பட்ட அந்தப் பெண் மனத்தளவில் ஆரோக்கியமான ஒருவனின் அங்கீகாரத்தால் புதுமலர்ச்சி பெறுகிறாள் என்ற கதை சொன்னால் அது எவ்வளவு அழகிய முடிவு! அதைவிடுத்து அவளுக்கு திருமணம் நடவாதபடி மீண்டும் அவளுக்குப் பைத்தியம் பிடித்து விடுகிறது என்று படக்கதையை அமைத்து பெண்களின் மறுமலர்ச்சிக்குத் தடைபோடுவது சரியாகுமா?

கலையின் தத்துவம் மனிதர்களை மகிழ்விப்பதற்காக அன்றியும் அவர் நல்லதைச் சொல்லி அடுத்த பரிணாமத்துக்கு அழைத்துச் செல்வதும் ஆம்'

உத்தியோகரீதியில் சிகரங்களைத் தொட்ட பெண்கள் கணவனையும் கணவனைச் சார்ந்தோரையும் சந்

திலகவதி

தோசப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் காரணமாக உத்தியோகத்தை துறந்துவிட்டு மீண்டும் பழைய குடிசைக்கே திரும்பிப்போய்' பின் கொசவம் வைத்த சேலை கட்டி, ரூபாய் அக்லத்தில் பொட்டு வைத்துக்கொண்டு புருஷனுக்காக காத்திருப்பதாக இன்னும் எத்தனை காலத்துக்கு படம் பிடிக்கப் போகிறார்கள்?

போலீஸ் அதிகாரி போன்ற வீரம் மிக்க பெண்கள் கூட ஆண்களை நம்பித்தான் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள முடிகிறது என்று இன்றும் கதை சொல்கிறீர்கள்

வரதட்சணை தராமல் திருமணம் செய்துகொள்ளும் பெண் தன் நாத்தனாருக்கு மட்டும் சீர் கொடுத்து திருமணம் செய்விப்பது எப்படிப் புதுமையாகும்? தன்னை பாலியல் பலாத்காரம் செய்யும் ஒரு கயவனை நீதியின் முன்னால் நிறுத்தி தண்டனை வாங்கித் தர சக்தியற்றுப் போன ஒரு பெண்ணைப் படைத்து, அதை விடவும் மோசமாக அவனையே அவள் தேடிப் பிடித்து திருமணம் செய்துகொள்வதாக கதையை அமைப்பது எவ்வளவு கோளாறான கருத்தாகும்

தமிழ் சினிமாவைப் பொறுத்தவரை இளம் பெண்கள், கவர்ச்சிப் பாவைகள், கதாநாயகனுடன் டூயட் பாடுபவர்கள். கணவனுக்கும் மகனுக்கும் இடையே சிக்கி பாசத்தில் நெருக்குண்டு கண்ணீர் வடிப்பவர்கள், சமூகத்துக்கு அவசியமில்லாதவர்கள்

பெண்களை தெய்வமாக்குதல் வேண்டாம். இழிவுபடுத்தவும் வேண்டாம், அவர்களை மனுஷிகளாக, யதார்த்தமான சமூக ஜீவிகளாக சித்தரிக்க வேண்டும் என்பதே நம் கோரிக்கை

தீமை, சிங்கத்தின் முழக்கமாகப் பேரொலி செய்கிறது. எப்போதோ ஒருமுறை நன்மைகள் எலியின் கீச் சொலியாக கேட்கவே செய்கிறது என்பது மறுப்பதற்கில்லை. மனதில் உறுதி வேண்டும், தியாகபூமி, விதி, நூல் வேலி, தண்ணீர் தண்ணீர், அச்சமில்லை அச்சமில்லை போன்ற சில நல்ல முயற்சிகள் மிக அருகியே காணப்படுவது நம் காலத்தின் துரதிர்ஷ்டம்

தந்தைக்கு மகளாய், அண்ணனுக்கு தங்கையாய், கணவனுக்கு மனைவியாய், பிள்ளைகளுக்குத் தாயாய் மட்டுமே ஒரு பெண் பூரணத்துவம் அடைந்துவிடுவதில்லை சமூகத்தின் அங்கம் என்கிற முறையில் அவளின் கடமைகள் பரந்துவிரிந்து கிடக்கின்றன, அதைப் பேச பாத்திரங்களாக வடிக்க, தமிழ்படங்கள் ஏன் தயங்குகின்றன என்பதே நாம் முன் வைக்கும் கேள்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசிப்பக்கம்

கசப்பான உண்மைகள்

மலையகத்தைப் பற்றியும்..

மலையக தலைவர்களைப்பற்றியும்...

மலையக முன்னேற்றத்திற்காக பாடுபட்ட முன்னோடிகளைப்பற்றியும்...

வரலாற்று ரீதியான உண்மைகள் மறைக்கவும் மறைக்கப்பட்டும் வருகின்றன.

இன்றைய இளைய தலைமுறையினர்க்கு இந்த கசப்பான உண்மையை எடுத்துக்கூற வேண்டியது நமது கடமையாகின்றது;

மலையகம் பற்றி எழுதும் ஒரு சிலர் எந்தவித தேடுதல் முயற்சிகளுமின்றி உண்மைகளை தேடிப் பாராமல் யாரோஎழுதியவைகளை மேற்கோள்காட்டி வருகின்றனர்.

பின்னர்... அதனையே மற்றவர்களும் எடுத்தாளுகின்றனர்.

அதனால் வேர்களை தேடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

(மலையக மக்களால் மாத்திரமின்றி தமிழ் பேசும் மக்களால் ''மலைநாட்டு காந்தி'' என்று அன்போடு அழைக்கப்பட்ட பெரியார் கே. இராஜலிங்கம் அமரராகி முப்பது ஆண்டுகளாகப் போகின்றன.)

(மலைநாட்டு காந்தி இராஜலிங்கம் அவரது நினைவு தினம் பெப்ரவரி மாதம் வந்தது.) ஆனால் அவரைப்பற்றி யாராவது நினைத்துப்பார்த்தார்களா?

தன் வாழ்வு முழுவதையும் மலையக மக்களின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணித்த உத்தம தலைவர் தான் இராஜலிங்கம்!

அதனால்தான் இவர் மறைவுக்கு பின்னர் பாராளுமன்றத்தில் அமைச்சர் தொண்டமான் பேசுகையில் ''காலஞ்சென்ற இராஜலிங்கம் அவர்கள் பாராளுமன்ற அங்கத்தவராக மாத்திரம் இருக்கவில்லை. தலை சிறந்த தொழிற்சங்கவாதியாகவும் விளங்கினார். கிட்டத்தட்ட இருபத்தைந்து ஆண்டுகளாக நானும் அவரும் ஒரே நோக்கத்துடன் ஒரே ஸ்தாபனத்தின் கீழ் சகாக்களாக இருந்து பணியாற்றி வந்துள்ளோம்..'' என கூறியுள்ளார்.

மலைநாட்டு காந்தி என்றழைக்கப்பட்ட இராஜலிங்கம்... புசல்லாவையில் சங்குவாரி தோட்டத்தில் பிறந்தார்.. ஆரம்ப கல்வியைத் தோட்டப் பாடசாலையிலும், பின்னர் கம்பளை சென், அன்றூஸிலும், கண்டி சென். அந்தனீஸிலும் கல்வியை தொடர்ந்து கற்றுமுடித்தார்.

(1927-ம் ஆண்டு மகாத்மா காந்தி இலங்கைக்கு வந்தார். அவருடைய வருகை இராஜலிங்கத்தின் இதயத்தில் புதிய தாக்கத்தை ஏற்படுத்தியது. ''மக்களின் சேவையே மகேசன் சேவை'' எனக்கருதினார். தன் வாழ்க்கையை மக்கள் சேவைக்கு என அர்ப்பணித்தார்.)

கல்வியின் மூலமே மலையக சமூகத்தை முன்னேற்ற வேண்டும் எனக் கண்டார். புசல்லாவ பகுதியில் சரஸ்வதி வித்தியாலயத்தை நிறுவினார். வாலிப சமாஜம் ஒன்றையும் அமைத்தார். அவற்றின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்தார்.)

1947-ம் ஆண்டு பாராளுமன்றத்தில் பிரவேசித்தார். பாராளுமன்றத்தில் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக குரல் எழுப்பினார்.

மலையகத் தலைவர்களில் தனக்கென வாழாத அரும் பெரும் தலைவர் இராஜலிங்கம் புசல்லாவையில்அவர் உருவாக்கிய சரஸ்வதிவித்தியாலயத்தை அமரர் இராஜலிங்கம் வித்தியாலயமாக மாற்றப்பட வேண்டும்.

இலங்கை இந்தியன் காங்கிரஸ், பின்னர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றின் ஸ்தாபக தலைவரான இராஜலிங்கத்தை அந்த ஸ்தாபனம் நினைத்துப் பார்க்க வேண்டும்.)

ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்காக பாடுபட்ட தலைவர்களை அந்த சமூகம் மறக்காது. அவர்களின் பணியை இன்றைய இளைய தலைமுறையினர்க்கு எடுத்துக் கூற வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

இவர்களுடைய வாழ்வும் பணிகளும் வரலாறாக நூலுருவில் வரவேண்டிய முக்கியமானதாகும்.

—அந்தனி ஜீவா

கண்டி தோட்டப்பிரதேச சங்கட்கான கூட்டுச்செயலகத்திற்காக கொழும்பு லங்கா வெளியீட்டகம் அச்சிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Sri Lanka

1929ஆம் ஆண்டில் "தேசபக்தன்" தினசரியாக வெளிவர ஆரம்பித்தது. திருமதி மீனாட்சி அம்மையார் பத்திரிகையைப் பொறுப்பேற்றார். பிரதம ஆசிரியரும், சொந்தக்காரருமாகிய கௌரவ. கோ. நடேசய்யருக்காக அன்னாரின் மனைவி ஸ்ரீமதி. கோ. ந. மீனாட்சியம்மாளால் அச்சிட்டு பிரசுரிக்கப் படுகின்றது என்ற குறிப்புடனேயே பத்திரிகை தினந்தோறும் வெளிவந்தது.

நூல் தேசபக்தன் கோ. நடேசய்யர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org